Find us on facebook/tamilmirror Follow us on tamilmirror epaper/tamilmirror.lk

தமிழ் Mirror

www.tamilmirror.lk

MONDAY, JULY 25, 2022

திங்கட்கிழமை ஜூலை, 25, 2022 | ஒளி:08 கதிர் 057 | பக்கம்:08 | நகரப்பதிப்பு | FREE

# வெடிபொருள் அச்சம்

போராட்டக்காரர்களால் ஜூலை 9 ஆம் திகதியன்று ஜனாதிபத மாளிகை மற்றும் ஜனாதிபதி செயலகம் ஆகியன கைப்பற்றப்பட்டன.

அதன்பின்னர், அவ்விரு இடங்களிலுள்ள கட்டடங்களிலும் வேறு நபர்கள், வெடிபொருட்களை பொருத்தியுள்ளனர் என தகவல்கள் கிடைத்தன.

தொடர்ச்சி P2

# குரங்கு அம்மை பேரச்சம் அவசர நிலை பிரகடனம்



குரங்கு அம்மை நோய்ப் பரவல் குறித்து எச்சரிக்கை விடுத்துள்ள உலக சுகாதார ஸ்தாபனம் உலக சுகாதார அவசரநிலையை பிரகடனப்படுத்தியுள்ளது.

உலக அளவில் கவனம் கொள்ளப்பட வேண்டிய ஒரு பொது சுகாதார நெருக்கடியாக சர்வதேச அளவில் பரவியுள்ள குரங்கு அம்மை பிரதிபலிக்கிறது என்று உலக சுகாதார ஸ்தாபனத்தின் தலைவர் டெட்ராஸ் அதானம் கெப்ரியேசஸ், சனிக்கிழமை (23) அறிவித்தார்.

தொடர்ச்சி P2

# ரணிலை அம்பலப்படுத்திய விக்கிலீக்ஸ்

தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, 2007 ஆம் ஆண்டில், எதிர்க்கட்சித் தலைவராக பதவி வகித்த போது, மேற்கொண்ட நடவடிக்கைகள் தொடர்பில் விக்கிலீக்ஸ் அம்பலப்படுத்தியுள்ளது.

இலங்கைக்கு வழங்கும் நிதி உதவிகளை கைவிடுமாறு, ஜப்பானிடம் ரணில் விக்கிரமசிங்க கேட்டிருந்தார் என விக்கிலீக்ஸ் இணையத்தளம் அம்பலப்படுத்தியுள்ளது.

ரணில் விக்கிரமசிங்கவின் அந்த கோரிக்கையை நிராகரித்திருந்த ஜப்பான், தலைவர்களால் இழைக்கப்படும் தவறுகளுக்காக இலங்கை மக்களை தண்டிக்கக் கூடாது என பதிலளித்துள்ளதாக விக்கிலீக்ஸில் குறிப்பிடப்பட்டுள்ளது.

2009 யுத்தக் குற்றங்கள் தொடர்பில்

# கோட்டாவுக்கு எதிராக குற்றவியல் முறைப்பாடு

## சிங்கப்பூர் சட்டமா அதிபரிடம் சமர்ப்பிப்பு

இலங்கையின் முன்னாள் ஜனாதிபதி நந்தசேன கோட்டாபய ராஜபக்ஷவை யுத்தக் குற்றங்களில் ஈடுபட்டமைக்காக உடனடியாகக் கைது செய்யுமாறு கோரி, சர்வதேச உண்மை மற்றும் நீதிக்கான செயற்றிட்டத்தின் சட்டத்தரணிகள், சிங்கப்பூர் சட்டமா அதிபரிடம் குற்றவியல் முறைப்பாடொன்றை சமர்ப்பித்துள்ளனர்.

தொடர்ச்சி P2



# அமைதியான ஆர்ப்பாட்ட உரிமையை பாதுகாப்பேன்

## கொழும்பிலுள்ள இராஜதந்திரிகளுக்கு ஜனாதிபதி விளக்கம்

**அகிம்சைப் போராட்டங்களுக்கு இடங்கள் கிடைத்துள்ளன.**

**பிற நோக்கங்களில் தலையிடுவதற்கும் அனுமதிக்கப்படவில்லை**

அமைதியான, வன்முறையற்ற கூட்டத்தின் உரிமைகளை நிலைநாட்டுவதற்கான இலங்கையின் உறுதிப்பாட்டை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மீண்டும் உறுதிப்படுத்தியுள்ளார் என்று ஜனாதிபதி ஊடகப்பிரிவு, நேற்று (24) தெரிவித்தது.

கொழும்பில் அமைந்துள்ள இராஜதந்திரிகளுக்கு வெள்ளிக்கிழமை (27) இடம்பெற்ற சந்திப்பில் ஜனாதிபதி இந்த நிலைப்பாட்டை வெளிப்படுத்தினார் என்று ஊடகப்பிரிவின் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

தொடர்ச்சி P2





# கடன் அட்டைகளுக்கான வட்டி வீதங்கள் அதிகரிப்பு

இலங்கையில் உள்ள பல வர்த்தக வங்கிகள் கடன் அட்டைகளுக்கான வருடாந்த வட்டி வீதத்தை அதிகரித்துள்ளன.

கடன் அட்டைகளுக்கான வருடாந்த வட்டி வீதம் 36 சதவீதமாக அதிகரிக்கப்பட்டுள்ளதாக வங்கிகள் தெரிவிக்கின்றன.

தொடர்ச்சி P2



நல்லூர் திருவிழா:

# கொடிச்சீலைக்கான காளாஞ்சி வழங்கல்

வரலாற்றுச் சிறப்பு மிக்க நல்லூர் கந்தசுவாமி கோவிலின் வருடாந்தப் பெருந் திருவிழாவுக்கான கொடிச்சீலை வடிவமைப்பாளர்களிடம் காளாஞ்சி கையளிக்கும் நிகழ்வு, நேற்று (24) இடம்பெற்றது. வள்ளியம்மை திருக்கல்யாணப் படிப்புடன், பந்தற்கால் நாட்டுதல் நடைபெற்று, பாரம்பரிய முறைப்படி கொடிச்சீலை வழங்கும் மரபுடையவர்களுக்கான காளாஞ்சி மாட்டுவண்டில் மூலம் நல்லூரிலிருந்து கல்வியங்காட்டுக்கு எடுத்துச் செல்லப்பட்டு கலாசார முறைப்படி பெருந்திருவிழாவுக்கான பத்திரிகையும், காளாஞ்சியும் கையளிக்கப்பட்டன. கோவிலின் வருடாந்தப் பெருந்திருவிழா, எதிர்வரும் 2ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி, 25 நாட்கள் திருவிழா இடம்பெறவுள்ளது.

(எம்.றொசாந்த்)

# குரங்கு அம்மை குறித்து இலங்கை உஷார் நிலை

இலங்கையும் குரங்கு அம்மை தொடர்பில் மிகுந்த எச்சரிக்கையுடன் உள்ளதாக பிரதி சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் விசேட வைத்திய நிபுணர் ஹேமந்த ஹேரத் தெரிவித்துள்ளார்.

தொடர்ச்சி P2





# ஃபைசர் தடுப்பூசியின் காலாவதி நீடிப்பு

உலக சுகாதார ஸ்தாபனத்தின் பரிந்துரைகளின் அடிப்படையில் ஃபைசர் தடுப்பூசியின் காலாவதித் திகதி நீட்டிக்கப்பட்டுள்ளதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

தொடர்ச்சி P2

# 3 நாட்கள் பாடசாலை: 2 நாட்கள் நிகழ்நிலை

## தென்மாகாணம் தனிவழியில் செல்கிறது

அரச மற்றும் அரச அங்கீகாரம் பெற்ற தனியார் பாடசாலைகளின் கல்வி நடவடிக்கைகள், இன்று திங்கட்கிழமை (25) முதல் மீண்டும் ஆரம்பமாகும் என கல்வி அமைச்சு அறிவித்துள்ளது.

தொடர்ச்சி P2

# 2.3 மில்லியன் குடும்பங்கள் இந்திய நிவாரணம் பெற்றுள்ளனர்



மஹேஸ்வரி விஜயனந்தன்

இலங்கைக்கு மனிதாபிமான ரீதியில் அனுப்பப்பட்ட தமிழக நிவாரணப் பொருள்களில் மூன்றாம் கட்டம் நாட்டை வந்தடைந்துள்ளதென தெரிவித்த இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் தலைவர் செந்தில் தொண்டமான், தமிழக அரசாங்கத்தால் இதுவரை இலங்கைக்கு

தொடர்ச்சி P2

# கோட்டா கோ கம விவகாரம்: புதன்று சபையில் விவாதம்



கொழும்பு காலிமுகத்திடலில் அமைக்கப்பட்டிருந்த கோட்டா கோ கம போராட்ட தளத்தில் இருந்து போராட்டக்காரர்களை வெளியேற்றியமை தொடர்பான விவாதம், பாராளுமன்றத்தில் புதன்கிழமை (27) நடைபெறவுள்ளது.

தொடர்ச்சி P2

# இந்திராணி வீட்டின் பாத்திரத்தில் தோட்டாக்கள்

ஒ. செ.கீதாஞ்சன், சண்முகம் தவசீலன்

முல்லைத்தீவு, கேப்பாபிலவு பகுதியிலுள்ள வீடொன்றின் சமையலறையில் உள்ள பாத்திரத்தில் பொலித்தீன் பொதியினால் சுற்றப்பட்டிருந்த துப்பாக்கி ரவைகள் நேற்று (24) மீட்கப்பட்டன.




தொடர்ச்சி P2

கியூஆர் குறியீட்டு முறைமை

# 20 இடங்களில் வெற்றி

நாடளாவிய ரீதியில் உள்ள 20 இடங்களில் தேசிய எரிபொருள் அனுமதிச்சீட்டு அல்லது கியூஆர் குறியீட்டு முறைமை வெற்றிகரமாகப் பரிசோதிக்கப்பட்டதாக தெரிவித்த மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகர, 5 இடங்களில் குறித்த முன்னோடித் திட்டத்தை செயல்படுத்த முடியவில்லை என்று தெரிவித்தார்.

தொடர்ச்சி P2







# இலங்கைக்கு ஆதரவு வழங்கத் தயார்



பிரித்தானிய பாராளுமன்றத்தில் பொதுநலவாய மற்றும் அபிவிருத்தி விவகாரங்களுக்கான இராஜாங்க அமைச்சர் தரிக் அஹமட், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு தொலைபேசி அழைப்பை எடுத்து,

தொடர்ச்சி P2





# கறுப்பு ஜூலையின் வலிகள் கோட்டா கோ கமவில் சித்தரிப்பு

தமிழர்களுக்கு எதிராக 1983 ஆம் ஆண்டு திட்டமிட்டு கட்டவிழ்த்துவிடப்பட்ட, கறுப்பு ஜூலையின் 39 ஆண்டு கால வலி, காலிமுகத்திடலுள்ள, காலி முகத்திடலுள்ள கோட்டா கோ ஹோமில் நேற்று (24) நினைவுகூரப்பட்டது.



தொடர்ச்சி P2

PAGE 1 தொடர்ச்சிகள்

## குரங்கு அம்மை பேரச்சம் அவசர நிலை பிரகடனம்

உலக சுகாதாரத்துக்கு ஒரு குறிப்பிடத்தக்க அச்சுறுத்தலாக குரங்கு அம்மையை உலக சுகாதார ஸ்தாபனம் கருதுவதுடன், தொற்றுநோயாக அதிகரிக்கும் என்றும் எச்சரிக்கை விடுத்துள்ளது.

உலகில் 75 நாடுகளில் 16 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் குரங்கு அம்மையால் பாதிக்கப்பட்டுள்ளதுடன், இதுவரை 5 பேர் உயிரிழந்துள்ளனர்.

சுகாதார ஸ்தாபனத்தின் தரவுகளின்படி, உறுதிப்படுத்தப்பட்ட நோய்த்தொற்றுகளின் எண்ணிக்கை ஜூன் பிற்பகுதியிலிருந்து ஜூலை ஆரம்பத்தில் 77% ஆகஅதிகரித்துள்ளது.

ஆண்களுடன் உடலுறவு கொள்ளும் ஆண்கள் தற்போது தொற்றுநோய்க்கான அதிக ஆபத்தில் உள்ளனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

மேற்கு மற்றும் மத்திய ஆபிரிக்க நாடுகளில் இருந்து பெரும்பாலும் பதிவாகிய குரங்கு அம்மை, அமெரிக்கா, அவுஸ்திரேலியா, ஐக்கிய அரபு இராச்சியம் மற்றும் ஐரோப்பிய நாடுகளிலும் பதிவாகியுள்ளன.

இந்தநிலையில், வெளிநாட்டு பயண வரலாறை கொண்டிராத முதலாவது குரங்கு அம்மை தொற்றாளர் ஒருவர் டெல்லியில் பதிவாகியுள்ளார் என்று இந்திய ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

ஏற்கெனவே கேரளாவில் 3 பேர் அடையாளம் காணப்பட்டுள்ள நிலையில், வெளிநாட்டு பயண வரலாறை கொண்டிராத நபர் இவர் என்று ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

## கோட்டாவுக்கு எதிராக குற்றவியல் முறைப்பாடு

சர்வதேச உண்மை மற்றும் நீதிக்கான செயற்றிட்டம், நேற்று (24) வெளியிட்ட அறிக்கையிலேயே இவ்விடயம் குறிப்பிடப்பட்டுள்ளது.

2009 ஆம் ஆண்டு உள்நாட்டு யுத்தம் இடம்பெற்ற காலத்தில், பாதுகாப்புச் செயலாளராக கடமையாற்றிய கோட்டா, ஜெனீவா ஒப்பந்தங்களை கடுமையாக மீறினார் என்று சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இவை, உலகளாவிய சட்ட அதிகார வரம்பின் கீழ், சிங்கப்பூரில் உள்நாட்டு விசாரணைக்கு உட்படுத்தக் கூடிய குற்றங்கள் என்றும் 63 பக்க குற்றவியல் ஆவணத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இலங்கையில் உள்நாட்டு யுத்தின் போது ஜெனீவா உடன்படிக்கைகள், சர்வதேச மனிதாபிமானச் சட்டம் மற்றும் சர்வதேச குற்றவியல் சட்டங்களை கோட்டாபய ராஜபக்ஷ கடுமையாக மீறியதாக குறித்த முறைப்பாட்டில் வாதிடப்பட்டுள்ளது.

கொலை, படுகொலை, சித்திரவதை மற்றும் மனிதாபிமானமற்ற நடத்தை, பாலியல் வன்புணர்வு மற்றும் பிற பாலியல் ரீதியான வன்முறைகள், உரிமைகளைத் தடுத்தல், கடுமையான உடல் மற்றும் உள ரீதியான பாதிப்பு ஏற்படுத்தல் மற்றும் பட்டினி ஆகிய குற்றச் செயல்கள் இதில் அடங்கும் என்று சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

## அமைதியான ஆர்ப்பாட்ட உரிமையை பாதுகாப்பேன்

சட்டவிரோதமான முறையில் ஜனாதிபதி செயலகத்தை ஆக்கிரமித்துள்ள ஆர்ப்பாட்டக்காரர்களை அகற்றுவது தொடர்பில் இராஜதந்திரிகளுக்கு விளக்கமளிக்கும் வகையில் இந்த சந்திப்பு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

சிவில் மற்றும் அரசியல் உரிமைகள் தொடர்பான சர்வதேச உடன்படிக்கையின் 21வது சரத்தும், அமைதியான முறையில் ஒன்றுகூடுவதற்கான உரிமைகளை நிர்வகிக்கும் இலங்கையின் அரசியலமைப்பின் 14 (1)(பி) உறுப்புரையும் இரண்டும் அரசாங்கத்தால் ஆதரிக்கப்படும் என ஜனாதிபதி ரணில் தெரிவித்தார்.

அமெரிக்க சிவில் லிபர்டீஸ் யூனியன் வழங்கிய அறிவுறுத்தல்களில், அரசாங்க கட்டடங்களை தடுப்பதற்கும், சொத்துக்கள் வடிவமைக்கப்பட்ட பிற நோக்கங்களில் தலையிடுவதற்கும் எதிர்ப்பாளர்கள் அனுமதிக்கப்படவில்லை என்று ஜனாதிபதி மேலும் விளக்கினார்.

நகருக்குள் அகிம்சை வழியிலான போராட்டங்கள் சொத்துக்களுக்கும் உயிர்களுக்கும் ஆபத்து ஏற்படாமல் தொடர அனுமதிக்கப்படுவதை உறுதிசெய்ய எடுக்கப்படும் நடவடிக்கைகள் குறித்தும் இராஜதந்திரிகளுக்கு விளக்கப்பட்டது.

விகாரமஹாதேவி பூங்காவில் திறந்தவெளி அரங்கு, புதிய நகர மண்டபம், ஹைட் பார்க் மற்றும் கேம்பல் பார்க் போன்ற கொழும்பில் உள்ள வசதிகள் அனைத்தும் அகிம்சைப் போராட்டங்களுக்குக் கிடைக்கப்பெற்றன.

கோட்டகோகம போராட்டத் தளம் தொடர்பான கவலைகளை நிவர்த்தி செய்யும் போது, தவறான சமூக ஊடக அறிக்கைகளுக்கு மாறாக, பாதுகாப்புப் படையினரால் அது அகற்றப்படவில்லை என்று விளக்கப்பட்டது.

மேலும், பொலிஸாரால் கைது செய்யப்பட்ட அனைவரையும் கொழும்பு நீதவான் நீதிமன்றில் ஆஜர்படுத்துவது உட்பட பின்பற்றப்படும் சட்ட வழிகள் குறித்தும் சட்டமா அதிபரால் பங்குபற்றியவர்களுக்கு விளக்கமளிக்கப்பட்டது.

## குரங்கு அம்மை குறித்து இலங்கை உஷார் நிலை

இந்நாட்டு மக்களை நோயிலிருந்து பாதுகாக்கும் முறையான வேலைத்திட்டம் ஏற்கெனவே நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது என்றும் அவர் குறிப்பிட்டார்.

## கடன் அட்டைகளுக்கான வட்டி வீதங்கள் அதிகரிப்பு

கடன் அட்டைகளுக்கு வழங்கப்படும் வட்டி வீதங்களின் விதிக்கப்பட்ட வரம்புகளை நீக்க , மத்திய வங்கியின் நாணயச் சபை ஏப்ரல் 08 ஆம் திகதி தீர்மானித்தது.

அதன் பிறகு, வட்டி வீதங்கள் ஏற்கெனவே இருந்த 18% லிருந்து 24% ஆகவும், பின்னர் 30% ஆகவும், தற்போது மீண்டும் 36% ஆகவும் அதிகரிக்கப்பட்டுள்ளன.

## 3 நாட்கள் பாடசாலை: 2 நாட்கள் நிகழ்நிலை

அதன்படி, பாடசாலைகள் மீண்டும் ஆரம்பிக்கும் போது, மாணவர்கள் திங்கள், செவ்வாய் மற்றும் வியாழக்கிழமைகளில் பாடசாலை சென்று கல்வி பயிலவும் புதன் மற்றும் வெள்ளிக்கிழமைகளில் ஒன்லைன் கற்றல் முறைகளை கடைப்பிடிக்கவும் கல்வி அமைச்சு அறிவுறுத்தியுள்ளது.

இது தொடர்பாக அனைத்து அதிபர்கள், மேலதிகமாக மாகாண கல்வி செயலாளர்கள், மாகாணக் கல்வி பணிப்பாளர்கள், பிராந்தியக் கல்வி பணிப்பாளர்கள், பிரதேச கல்வி பணிப்பாளர்கள் மற்றும் உதவிக் கல்வி பணிப்பாளர்களுக்கு அறிவுறுத்தியுள்ளதாக கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது.

இந்த நிலையில், தென் மாகாண சபையின் நிர்வாகத்துக்கு உட்பட்ட அனைத்து பாடசாலைகளும் இன்று (25) முதல் வாரத்தில் ஐந்து தினங்களும் நடைபெறும் என தென் மாகாண கல்வி திணைக்களம் அறிவிதுள்ளது.

கல்வி அமைச்சின் கீழுள்ள பாடசாலைகளை வாரத்தின் சிலநாட்களுக்கும் மாகாண சபையின் கீழுள்ள பாடசாலைகளை ஐந்து நாட்களுக்கும் நடத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

தென் மாகாண கல்வி அதிகாரிகளுக்கு இடையில் நேற்று (24) நடைபெற்ற கூட்டத்தில் இந்த தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

எனினும் போக்குவரத்து பிரச்சினையால், அதிபர்கள், ஆசிரியர்கள் மற்றும் பாடசாலை நிர்வாகத்தினருக்கு பாடசாலைக்கு வருகை தர முடியாவிடின் அது குறித்து முன்கூட்டியே அனுமதி பெற வேண்டும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, சாதாரண தரப் பரீட்சையின் விடைத்தாள் திருத்தும் இரண்டாம் கட்ட பணி, எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் 6ஆம் திகதி ஆரம்பிக்கப்பட உள்ளதாக பரீட்சை ஆணையாளர் நாயகம் எல். எம். டி. தர்மசேன, நேற்று (24) தெரிவித்தார்.

விடைத்தாள் திருத்தும் மத்திய நிலையங்களுக்குச் செல்வதில் ஆசிரியர்களுக்கு ஏற்பட்ட சிரமம் காரணமாக இம்மாத ஆரம்பத்தில் இரண்டாம் கட்ட விடைத்தாள் திருத்தும் பணி தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டதாக ஆணையாளர் நாயகம் குறிப்பிட்டார்.

எரிபொருள் பற்றாக்குறையால் காரணமாக போக்குவரத்து செய்ய முடியாது என்று பணியில் ஈடுபட்டிருந்த ஆசிரியர்கள் உட்பட அதிகாரிகளால், தனக்கு அறிவிக்கப்பட்டதையடுத்தே இரண்டாம் கட்ட விடைத்தாள் திருத்தும் பணி தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டதாக சுட்டிக்காட்டினார்.

## வெடிபொருள் அச்சம்

அவை தொடர்பில் வெடிகுண்டு செயலிழக்கும் பிரிவினர் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர் என பொலிஸ் ஊடகப்பிரிவு அறிவித்துள்ளது.

அவ்விரு கட்டடங்களுக்கும் விளைவிக்கப்பட்ட சேதங்கள் தொடர்பிலான விபரங்கள் திரட்டப்படுகின்றன. சேதங்களை விளைவித்தோரைக் கைது செய்வது தொடர்பிலான நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்பட்டுள்ளன என பொலிஸ் தரப்பு அறிவித்துள்ளது.

## ஃபைசர் தடுப்பூசியின் காலாவதி நீடிப்பு

உலக சுகாதார ஸ்தாபனம் மற்றும் யுனிசெஃப் ஆகியவற்றின் விநியோகப் பிரிவின் பரிந்துரைக்கு அமைய ஃபைசர் தடுப்பூசியின் காலாவதித் திகதி நீடிக்கப்பட்டுள்ளதாக சுகாதார அமைச்சு வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அதற்கமைய, 90-60 டிகிரி செல்சியஸ் வெப்பநிலையில் சேமிக்கப்படும் தடுப்பூசிகளின் காலாவதி காலம் 9 முதல் 12 மாதங்கள் வரை நீட்டிக்கப்படும் என்று அமைச்சு அறிவித்துள்ளது.

இதேவேளை, இலங்கையில் பதிவாகியுள்ள கொரோனா நோயாளர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளதாக அரசாங்க வைத்திய அதிகாரிகள் சங்கத்தின் பொதுச் செயலாளர் ஹரித அலுத்கே தெரிவித்துள்ளார்.

அரசாங்க தகவல் திணைக்களத்தின் அறிவிப்புக்கு அமைய 72 கொரோனா தொற்றாளர்களும் 02 கொரோனா மரணங்களும், நேற்று முன்தினம் பதிவாகியுள்ளன.

இதேவேளை, டொலர் தட்டுப்பாடு காரணமாக இலங்கை தடுப்பூசிகளை மேலும் இறக்குமதி செய்வது நடைமுறைச் சாத்தியமற்றது எனவும் எதிர்காலத்தில் நான்காவது டோஸைப் பெறாவிட்டால், பொதுமக்கள் மீண்டும் வைரஸ் தொற்றுக்கு ஆளாக நேரிடும் என்றும் இலங்கை பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் சங்கத்தின் தலைவர் உபுல் ரோஹன தெரிவித்தார்.

எனவே, அருகில் உள்ள சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகத்தை தொடர்பு கொண்டு தடுப்பூசி வழங்கப்படும் திகதிகளை விசாரிக்குமாறு பொதுமக்களிடம் கோரிக்கை விடுத்தார்.

## 2.3 மில்லியன் குடும்பங்கள் இந்திய நிவாரணம் பெற்றுள்ளனர்

அனுப்பப்பட்ட நிவாரணப் பொருட்களை 2.3 மில்லியன் குடும்பங்கள் பெற்றுக்கொண்டுள்ளன என்றார்.

காங்கிரஸின் தலைமையகமான சௌமியபவனில் நேற்று (24) நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இலங்கையில் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடியை அடுத்து, தமிழக அரசாங்கம் 40 மெற்றிக் தொன் அரிசி, 102 மெற்றிக் தொன் மருந்து பொருள்கள், 500 மெற்றிக் தொன் பால்மா என்பவற்றை இலங்கைக்கு நிவாரண உதவியாக அனுப்ப தீர்மானித்த நிலையில், அதில் இறுதிக்கட்ட பொருள்கள், நேற்று முன்தினம் இந்திய மக்களவை உறுப்பினரும் திராவிட முன்னேற்றக் கழகத்தின் மகளிரணிச் செயலாளர் கனிமொழி கருணாநிதியால் இலங்கைக்கு அனுப்பப்பட்டுள்ளன என்றார்.

இவ்வாறு அனுப்பப்பட்ட பொருள்கள் 25 மாவட்டங்களையும் உள்ளடக்கும் வகையில் வருமானம் குறைந்த 2.3 மில்லியன் குடும்பங்களுக்கு இதுவரை பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளன. நேற்று முன்தினம் அனுப்பப்பட்ட பொருள்களும் வருமானம் குறைந்த மிகுதியுள்ள குடும்பங்களுக்கும் பகிர்ந்தளிக்கப்படும் என்றார்.

எனவே, இந்த உதவியை இலங்கை மக்களுக்கு செய்ய முன்வந்த இந்திய மக்கள், தமிழக அரசாங்கம், இலங்கையிலுள்ள இந்திய உயர்ஸ்தானிகராலயம் உள்ளிட்ட அனைவருக்கும் இலங்கை மக்கள் சார்பில் நன்றி தெரிவிப்பதாகவும் தெரிவித்தார்.

## 20 இடங்களில் வெற்றி

முற்பதிவுகள் வழங்கப்படாமை, முற்பதிவினை வழங்குவதில் ஏற்பட்ட தாமதம் மற்றும் விநியோகத்தில் ஏற்பட்ட தாமதம் மற்றும் விநியோகம் என்பனவே இதற்கான காரணங்களாகும் என்று அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

நேற்றையதினம் (24) வெளியிட்ட டுவிட்டர் பதிவிலேயே மேற்குறிப்பிட்ட விடயங்களைச் சுட்டிக்காட்டியிருந்த அமைச்சர் மேலும் தெரிவித்திருந்தாவது,

இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தினால் 25 இடங்களில் இந்த முறைமை சோதனை செய்யப்பட்டதாகவும் நாடளாவிய ரீதியில் 20 இடங்களில் வெற்றிகரமாக நிறைவடைந்துள்ளதாகவும் அதன் கீழ் 4,708 வாகனங்களுக்கு எரிபொருள் நிரப்பப்பட்டுள்ளதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

கியூஆர் குறியீட்டின் கீழ் எரிபொருள் வழங்கும் முன்னோடித் திட்டம் ஏனைய ஐந்து இடங்களிலும் அடுத்த இரண்டு நாட்களில் செயல்படுத்தப்படும் என்றும் அமைச்சர் சுட்டிக்காட்டினார்.

இதேவேளை, கியூஆர்குறியீட்டு முறையைப் பயன்படுத்தி எரிபொருளைப் பெறுவதற்கு சனிக்கிழமை (23) இரவு வரை 35 இலட்சத்து 23,729 பேர் பதிவு செய்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

## கோட்டா கோ கம விவகாரம்: புதன்று சபையில் விவாதம்

இந்த விடயம் தொடர்பில் கலந்துரையாடுவதற்காக இன்றையதினம் (25) பாராளுமன்றத்தை கூட்டுமாறு எதிர்க்கட்சியின் பிரதான கொரடாவும் பாராளுமன்ற உறுப்பினருமான லக்ஷ்மன் கிரியெல்ல, பிரதமர் தினேஷ் குணவர்தனவிடம் சனிக்கிழமை (23) கடிதம் மூலம் கோரிக்கை விடுத்திருந்தார்.

எரிபொருள் பிரச்சினை காரணமாக பாராளுமன்றத்தை இன்று (25) கூட்டுவதும் பாராளுமன்ற உறுப்பினர்களை அழைப்பதும் நடைமுறையில் கடினமானது என்பதால், அவசரகால சட்ட வர்த்தமானி அறிவித்தலை சமர்ப்பித்து நிறைவேற்றுவதற்காக புதன்கிழமையன்று பாராளுமன்றம் கூடும் போது இதே விடயத்தை விவாதத்துக்கு எடுத்துக்கொள்வதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளதாக தெரியவருகிறது.

அவசரகால சட்ட வர்த்தமானி அறிவித்தல் விவகாரத்துக்காக மட்டுமே சபையைக் கூட்டுவதற்கு, பாராளுமன்ற விவகாரங்களுக்கான குழு தீர்மானித்திருந்தது.

போராட்டக்காரர்களை அடித்து துரத்துவது சட்டவிரோதமானதும் ஜனநாயகமற்றதுமான செயல் என்பதால் அதுபற்றி உரையாடல் மிகவும் அவசியம் என்று கிரியெல்ல எம்.பி கடிதத்தில் சுட்டிக்காட்டியுள்ளார்.

## இந்திராணி வீட்டின் பாத்திரத்தில் தோட்டாக்கள்

உணவுப்பொதியாக இருக்குமென நினைத்து அதனை அவர்கள் எடுத்து பார்த்தபோது, அதற்குள் துப்பாக்கி ரவைகள் காணப்பட்டுள்ளன.

அனைத்தும் புதிய துப்பாக்கி ரவைகளாக காணப்படுவதுடன், இதனை யார் கொண்டு வந்து வைத்திருப்பார்கள் என்ற அச்சம் ஏற்பட்டுள்ளதை தொடர்ந்து சம்பவம் தொடர்பில் முள்ளியவளை பொலிஸாருக்கு குடும்பத்தினர் தகவல் கொடுத்துள்ளார்கள்.

கேப்பாபிலவு பகுதியில் நீண்டகாலமாக படையினர் வசம் உள்ள தங்கள் காணிகளை விடுவிக்கக் கோரி போராட்டம் மேற்கொண்டுவரும் இந்திராணி என்பரின் வீட்டிலேயே இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

கேப்பாபிலவு படை முகாமிற்கு முன்னால் உள்ள இவர்களின் வீடு மற்றும் காணிகள் படையினரால் விடுவிக்கப்பட்டுள்ளபோதும் இவர்களின் மற்றுமொரு பூர்வீக காணியில் படையினர் ஆக்கிரமித்து அங்கிருக்கும் வளங்கள் படையினரால் பயன்படுத்தப்பட்டு வருகின்றன.

இந்நிலையில் கடந்த காலங்களில் தங்களின் காணிக்காக போராடிவந்த இவர்கள் இன்றும் தங்கள் சொந்தக் காணிகளில் இருக்கம் படையினரை வெளியேற்றி தங்கள் காணிகளை மீட்டுத்தருமாறு கோரிக்கை விடுத்துவருகின்றார்கள்.

இந்நிலையில் இவரின் வீட்டுக்குள் எவ்வாறு துப்பாகி ரவைகள் வந்தன என்பது ஆச்சரியத்தைஏற்படுத்தியுள்ளதுடன், சந்தேகத்தையும் ஏற்படுத்தியுள்ளதாக இந்திராணி தெரிவித்துள்ளார்.

## இலங்கைக்கு ஆதரவு வழங்கத் தயார்

நேற்று (24) கலந்துரையாடியுள்ளார்.

இலங்கையின் தற்போதைய பாதுகாப்பு நிலைமை மற்றும் பொருளாதார நிலைமை குறித்து ஜனாதிபதியுடன் கலந்துரையாடியதாக அமைச்சர் தனது டுவிட்டர் கணக்கில் குறிப்பிட்டுள்ளார்.

அமைதியான போராட்டங்கள், ஊடக சுதந்திரம், மனித உரிமைகள் மற்றும் நீதி தொடர்பான உரிமைகள் குறித்து கலந்துரையாடலின் போது கவனம் செலுத்தியதாக அமைச்சர் தரிக் அஹமட் குறிப்பிட்டுள்ளார்.

தற்போதுள்ள சவால்களுக்கு மத்தியில் இலங்கைக்கு தொடர்ந்தும் ஆதரவை வழங்க பிரித்தானியா தயாராக இருப்பதாக அமைச்சர் தனது டுவிட்டர் பதிவில் குறிப்பிட்டுள்ளார்.

## கறுப்பு ஜூலையின் வலிகள் கோட்டா கோ கமவில் சித்தரிப்பு

வன்முறை கட்டவிழ்த்துவிடப்பட்ட நினைவுகூர்ந்தும், அன்றைய சம்பவங்களை கண்டித்தும், பொரளை கனத்தை பொது மயானத்துக்கு முன்பாக, சமூக அமைப்புகளால் நேற்று முன்தினம் (23) எதிர்ப்பு ஆர்ப்பாட்டமும் முன்னெடுக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.



## நல்லூர் திருவிழா:
# கொடிச்சீலைக்கான காளாஞ்சி வழங்கல்

வரலாற்றுச் சிறப்பு மிக்க நல்லூர் கந்தசுவாமி கோவிலின் வருடாந்தப் பெருந் திருவிழாவுக்கான கொடிச்சீலை வடிவமைப்பாளர்களிடம் காளாஞ்சி கையளிக்கும் நிகழ்வு, நேற்று (24) இடம்பெற்றது. வள்ளியம்மை திருக்கல்யாணப் படிப்புடன், பந்தற்கால் நாட்டுதல் நடைபெற்று, பாரம்பரிய முறைப்படி கொடிச்சீலை வழங்கும் மரபுடையவர்களுக்கான காளாஞ்சி மாட்டுவண்டில் மூலம் நல்லூரிலிருந்து கல்வியங்காட்டுக்கு எடுத்துச் செல்லப்பட்டு கலாசார முறைப்படி பெருந்திருவிழாவுக்கான பத்திரிகையும், காளாஞ்சியும் கையளிக்கப்பட்டன. கோவிலின் வருடாந்தப் பெருந்திருவிழா, எதிர்வரும் 2ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி, 25 நாட்கள் திருவிழா இடம்பெறவுள்ளது.

(எம்.றொசாந்த்)







# தள்ளு தள்ளு

எரிபொருளை பெற்றுக்கொள்வதற்காக வந்த வாகனமொன்று, எரிபொருள் நிரப்பும் நிலையத்துக்குள் கொண்டு செல்ல முடியாத நிலைமையொன்று அளுத்தகமவில் உள்ள ஐ.ஓ.சி எரிபொருள் நிரப்பும் நிலையத்துக்கு அருகில் ஏற்பட்டது.

அதுவரையிலும் இருந்த எரிபொருள் தீர்ந்தமையால் வாகனத்தை இயக்கிக்கொள்ள சாரதியால் முடியவில்லை.

எனினும், அந்த சந்தர்ப்பத்தில் அங்கு பாதுகாப்பு கடமையில் ஈடுபட்டிருந்த பொலிஸ் அதிகாரிகள், கடமைகளை கண்காணித்துக்கொண்டிருந்த அளுத்கம பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி நாலக மா கெதர, வாகனத்தை தள்ளுவதற்கு உதவி செய்கின்றமையை படத்தில் காணலாம்

(துசித குமார டி சில்வா)



# இரண்டு வாரங்களுக்குள் நிரந்தர அமைச்சரவை

சர்வகட்சி அரசாங்கமொன்றை நிறுவியதன் பின்னர், பாராளுமன்றத்தில் பெரும்பான்மை கட்சிகள் மற்றும் குழுக்களைச் சேர்ந்தவர்கள் பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில், நிலையான அமைச்சரவையை நிறுவுவதற்கு அரசாங்கம் ஆலோசித்துவருகின்றது.

அதனடிப்படையில், இன்னும் இரண்டு வாரங்களுக்குள் நிரந்தர அமைச்சரவை நியமிக்கப்படக்கூடும் என அரசாங்கத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுன, ரணில் விக்கிரமசிங்கவின் வெற்றிக்காக ஒத்துழைப்பு நல்கிய ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி, ஐக்கிய மக்கள் சக்தி, ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ், தமிழ் முற்போக்குக் கூட்டணி, அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் உள்ளிட்ட கட்சிகளைச் சேர்ந்தவர்கள் மற்றும் குழுக்களைச் சேர்ந்தவர்கள் இந்த நிரந்தர அமைச்சரவைக்குள் உள்வாங்கப்படவுள்ளனர்.

அந்தந்த கட்சிகள் மற்றும் குழுக்களுக்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தனிப்படை ரீதியில் அழைப்பு விடுத்துள்ளார் என்று அறியமுடிகின்றது.

நிரந்த அமைச்சரவையில் அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சர்களின் எண்ணிக்கை 20-30க்கு இடையில் இருக்கும். அதேபோன்ற எண்ணிக்கையில் இராஜாங்க அமைச்சர்கள் நியமிக்கப்படுவார்கள் என்றும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

தினேஷ் குணவர்தன புதிய பிரதமராக நியமிக்கப்பட்டதன் பின்னர் பழைய அமைச்சரவை, இடைக்கால அமைச்சரவையாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க முன்னிலையில், கடந்த 22 ஆம் திகதியன்று பதவிப்பிரமாணம் செய்துகொண்டது.

அத்துடன், நிரந்தர அமைச்சரவை நியமிக்கப்படும் போது, இடைக்கால அமைச்சரவையில் அங்கம் வகிக்கும் அமைச்சர்களின் விடயதானங்களில் மாற்றங்கள் ஏற்படும் என்றும அறியமுடிகின்றது.



# செல்லும் நிலைமையில் அலரிமாளிகை இல்லை

ஓரிரு சம்பவங்களில் இருந்து நாட்டை பற்றிய தெளிவான விம்பத்தை உருவாக்க முடியாதெனவும், அரசியலமைப்புக்கு அமையவே அரசாங்கம் செயற்படுவதாகவும் தெரிவித்த புதிய பிரதமர் தினேஷ் குணவர்தன, செல்லும் நிலையில் அலரிமாளிகை இல்லை என்றார்.

சர்வதேச விவகாரங்கள் பற்றி பேசுவதற்கு முன் நாட்டின் உள்விவகாரங்கள் தொடர்பில் தெரிந்துக்கொள்ள வேண்டும் எனவும், வெளிநாடுகளின் ஆதரவைப் பெற அரசாங்கம் செயற்பட்டு வருவதாகவும், ஸ்திரமான அரசாங்கம் ஒன்று இல்லாமல் நாட்டை முன்னோக்கிக் கொண்டு செல்ல முடியாது என்றார்.

# கொரோனா வைரஸ் வேகமாக பரவுகிறது

கொரோனா வைரஸ் தொற்று நாட்டில் மீண்டும் வேகமாகப் பரவி வருவதாகவும், கடந்த வாரத்தில் மாத்திரம் கொரோனா வைரஸ் தொற்றால் 8 பேர் உயிரிழந்துள்ளனர் என சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

சனிக்கிழமை (23) அன்று கொரோனா தொற்றாளர்கள் 72 பேர் புதிதாக இனங்காணப்பட்டுள்ளனர். அவர்களுடன் சேர்த்து, இனங்காணப்பட்ட தொற்றாளர்களின் மொத்த எண்ணிக்கை, 664,844 ஆக அதிகரித்துள்ளது.

இந்த மாதத்தில் இதுவரையில் 13 பேர் கொரோனா வைரஸால் உயிரிழந்துள்ளனர். நாளாந்தம் சுமார் 60 பேருக்குக் கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டு வருவதாகவும், தொற்றால் 60 வயதுக்கு மேற்பட்டவர்களே உயிரிழந்து வருகின்றனர் என சுகாதார அமைச்சு அறிவித்துள்ளது.



தொற்றுக்குள்ளானவர்களுக்கு பி.சி. ஆர் பரிசோதனைகள் மேற்கொள்ளப்படுவதில்லை என்பதாலும், கட்டடல்களுக்கான தட்டுப்பாடுக் காரணமாக கொரோனா வைரஸ் தொற்றுக்கு உள்ளாவோரின் எண்ணிக்கை இதனைவிட மேலும் அதிகரிக்குமென பொதுசுகாதாரப் பரிசோதகர்கள் சங்கத்தின் தலைவர் உபுல் ரோஹன தெரிவித்தார்.

நாட்டு மக்களுக்கு நான்காவது தடுப்பூசியாக பூஸ்டர் தடுப்பூசியை ஆகஸ்ட் 14ஆம் திகதிக்கு முன்னர் செலுத்த வேண்டும். ஒகஸ்ட் 14ஆம் திகதி பூஸ்டர் தடுப்பூசி காலாவதியாகும் எனவும் உபுல் ரோஹன தெரிவித்தார்.

# ஜனாதிபதி தலைமையில் ஆளுங்கட்சி கூட்டம்

ஆளுங்கட்சியின் விசேட கூட்டம் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையில் நாளை (26) பிற்பகல் நடைபெறவுள்ளது.

ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதியாக பதவியேற்ற பின்னர் ஆளுங்கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர்களுடனான முதலாவது கூட்டம் இடம்பெறவுள்ளது.

அவசரகாலச் சட்டத்தை பாராளுமன்றத்தில் சமர்ப்பித்து நிறைவேற்றும் விடயம் மற்றும் சர்வகட்சி அரசாங்கத்தை அமைப்பது குறித்தும் அங்கு கலந்துரையாடப்படும் என்றும் அரசாங்க வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

அவசரகால சட்ட வர்த்தமானி அறிவித்தலை சமர்ப்பித்து நிறைவேற்றுவதற்காக புதன்கிழமை (27) பாராளுமன்றம் கூடவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# 6ஆவது எரிவாயுக் கப்பல் கொழும்பை வந்தடைந்தது

3,750 மெற்றிக் தொன் சமையல் எரிவாயுவை சுமந்து கொண்டு 6ஆவது கப்பல், நேற்று (24) பகல் கொழும்பு துறைமுகத்தை வந்தடைந்துள்ளது என்று லிட்ரோ நிறுவனத்தின் தலைவர் முதித்த பீரிஸ் தெரிவித்தார்.

சனிக்கிழமையும் (23), 3740 மெற்றிக் தொன் எரிவாயு நாட்டை வந்தடைந்த நிலையில், அந்தக் கப்பலிலிருந்து எரிவாயுவை இறக்கும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

கொழும்பு மாவட்டத்துக்கு முன்னுரிமையளித்து நேற்றையதினம் (24) எரிவாயு விநியோகிக்கப்பட்டதாகவும் இன்றையதினம் (25) ஏனைய மாவட்டங்களுக்கு முன்னுரிமையளித்து சமையல் எரிவாயு சிலிண்டர்கள் விநியோகிக்கப்படவுள்ளன என்றும் அவர் தெரிவித்தார்.

# மக்கள் சக்தியால் தோற்கடிக்கப்படும்

நாட்டு மக்களின் பிரச்சினைகளை தீர்க்கக்கூடிய தேசிய சபை ஒன்றை ஸ்தாபிக்க வேண்டும் என எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாஸ வலியுறுத்தியுள்ளார்.

வெகுஜன அமைப்புகள், தொழிற்சங்கங்கள், சிவில் அமைப்புகள் உள்ளிட்ட அனைத்தையும் ஒன்றிணைந்து இந்த வேலைத்திட்டத்தைக் கட்டியெழுப்ப வேண்டும் எனவும், தேசிய சபைக்கான முற்போக்கான முன்மொழிவுகளைப் பாராளுமன்றத்தில் தான் முன்வைக்க உள்ளதாகவும், நாட்டு மக்கள் ஒன்றிணைந்து போராட்டத்தின் ஊடாக முன்னாள் பிரதமரை நாட்டு மக்கள் வீட்டுக்கு அனுப்பியுள்ளனர். இதன் பின்னர் ஏற்பட்ட மாற்றம் முன்பிருந்ததைவிட மோசமானதொரு நிலை எனவும் தெரிவித்தார்.

எதிர்க்கட்சியாக செயற்படும் அதேவேளை அரசாங்கத்தின் வெற்றிகரமான நல்ல திட்டங்களுக்கு பாராளுமன்ற



குழுமுறைமையின் ஊடாக ஆதரவை வழங்குவோம் என புதிய ஜனாதிபதி தெரிவு செய்யப்பட்டதன் பின்னர் நடைபெற்ற கட்சித் தலைவர்கள் கூட்டத்தின்போது தான் தெரிவித்ததாகவும் கூறினார்.

பாராளுமன்றத்தில் உள்ள 225 எம்.பிக்கள் பயணிக்கும் வழிகளும் சரியானதல்ல. எனினும் 134 பாராளுமன்ற உறுப்பினர்கள் சரியானப் பாதையில் பயணிக்க வேண்டும் என்றார்.

எவ்வாறாயினும் பாராளுமன்றத்தில் நடைபெற்றது ஜனாதிபதித் தேர்தல் இல்லை. மக்கள் பலத்துக்கு முன்பாக அரசாங்கம் நிச்சயமாக தோல்வியை சந்திக்கும் எனவும் திட்டவட்டமாக தெரிவித்தார்.

# மட்டுப்படுத்தப்படுகிறது எரிபொருள் விநியோகம்

## பௌசர்களின் எண்ணிக்கையும் குறைப்பு

இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் நாளாந்த எரிபொருள் விநியோகத்தை மட்டுப்படுத்துவதற்கு எடுத்த தீர்மானத்தின் விளைவாக, எரிபொருள் நிரப்பு நிலையங்களுக்கு எரிபொருள் கொண்டு செல்லும் பௌசர்களின் எண்ணிக்கையை மட்டுப்படுத்தப்பட்டுள்ளன.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போது, இலங்கை தனியார் எரிபொருள் பவுசர் உரிமையாளர்கள் சங்கத்தின் இணைச் செயலாளர் சாந்த சில்வா இவ்விடயத்தைத் தெரிவித்தார். அனைத்து எரிபொருள் நிலையங்களுக்கும் முற்பதிவு செய்யப்பட்ட எரிபொருட்களை உரிய நேரத்தில் வழங்குவது குறித்து கேள்வி எழுந்துள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.

நாளாந்தம் 3,000 மெற்றிக்தொன் பெற்றோல் மற்றும் 4,000 மெற்றிக்தொன் டீசலை விநியோகிப்பதற்கு கூட்டுத்தாபனம் தீர்மானித்துள்ளதாகவும் அனைத்து நிரப்பு நிலையங்களிலும் எரிபொருள் கிடைக்குமா என்ற கவலை நிலவுவதாகவும் குறிப்பிட்டார்.

இதேவேளை, நாட்டில் அடுத்த 30 நாட்களுக்கு போதுமான டீசல் கையிருப்பில் உள்ளதாக தெரிவித்துள்ள இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனம், 22 நாட்களுக்கு போதுமான பெற்றோலும் இருப்பில் உள்ளதாகவும் அறிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## இந்திய மீனவர்களின்
# விடுதலை, விசைப்படகு கோரி வேலை நிறுத்தம்

## இராமேஸ்வரம் துறைமுகத்தில் 700 படகுகள் நங்கூரம்

வவுனியா சிறையில் அடைக்கப்பட்டுள்ள 6 மீனவர்களையும், விசைப் படகையும் விடுதலை செய்ய வலியுறுத்தி இராமேஸ்வரம் மீனவர்கள் காலவரையற்ற வேலைநிறுத்தத்தில் ஈடுபட்டுள்ளனர்.

இதன் காரணமாக, இராமேஸ்வரம் துறைமுகத்தில் 700க்கும் மேற்பட்ட விசைப்படகுகள் மீன்பிடிக்கச் செல்லாமல் நேற்று நங்கூரமிட்டு நிறுத்தி வைக்கப்பட்டுள்ளன.

இதனால் ஒரு நாளைக்கு 5 கோடி இந்திய ரூபாய்க்கு மேல் வருவாய் இழப்பு ஏற்படும் என மீனவர்கள் தெரிவித்தனர்.



இராமேஸ்வரம் மீன்பிடித் துறைமுகத்தில் இருந்து கடந்த 21ஆம் திகதியன்று 500க்கும் மேற்பட்ட விசைப்படகுகளில் மீனவர்கள் கடலுக்கு மீன்பிடிக்கச் சென்று, தனுஷ்கோடி-தலைமன்னார் கடற்படரப்பில் மீன்பிடித்துக் கொண்டிருந்தனர்.

அப்போது அப்பகுதியில் ரோந்து வந்த இலங்கை கடற்படையினர் எல்லை தாண்டி மீன்பிடித்ததாகக் கூறி ஒரு விசைப்படகையும், அதில் இருந்த அந்தோணி, அஜித் உள்ளிட்ட 6 மீனவர்களையும் கைது செய்துள்ள நிலையில், அவர்கள் அறுவரும் வவுனியா சிறைச்சாலையில் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

இதையடுத்து இராமேஸ்வரத்தில்நடந்த மீனவர்கள் ஆலோசனைக் கூட்டத்தில், இலங்கை கடற்படை கைது செய்த 6 மீனவர்களையும், விசைப்படகையும் விடுவிக்கக் கோரி நேற்று முதல் காலவரையற்ற வேலைநிறுத்தத்தில் ஈடுவது மற்றும் இராமேஸ்வரம் பஸ் நிலையத்தில் ஆர்ப்பாட்டம் செய்வது என தீர்மானிக்கப்பட்டது.

அமைதியான போராட்டத்தை வன்முறைகள் மூலம்

# அடக்குவது ஆபத்தானது

மு.தமிழ்ச்செல்வன்

அமைதியான போராட்டத்தை, வன்முறைகள் மூலம் அடக்குவது ஆபத்தான பாதைகளைத் திறப்பதற்கே வழிவகுக்கும் என சமத்துவக் கட்சியின் பொதுச் செயலாளரும் முன்னாள் எம்பியுமான மு.சந்திரகுமார் குறிப்பிட்டுள்ளார்.

இது தொடர்பில் அவர் வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையில் குறிப்பிடப்பட்டு உள்ளதாவது: பொருளாதார பின்னடைவையும் அதற்குக் காரணமான அரசியல் குறைபாடுகளையும் நீக்கம் செய்து, புதிய முறைமையை அமல்படுத்த வேண்டியது இலங்கைக்கு மிக அவசியமானதாகும்.

இதை வலியுறுத்தி, அகிம்சை வழியில் போராட்டத்தை நடத்தி வருகின்ற காலிமுகத்திடல் இளைய சக்தி மீது மேற்கொள்ளப்பட்ட வன்முறைத் தாக்குதல்கள் கவலைக்குரியன; கண்டனத்துக்குரியன.



புதிதாகப் பொறுப்பேற்றுள்ள ஜனாதிபதி, நாட்டில் புரையோடிப்போயுள்ள பொருளாதார நெருக்கடிகளை தீர்ப்பதற்கும் நிலைபேறான அரசியல், பொருளாதார கொள்கைகளை கொண்டுவரவும் முயற்சிக்க வேண்டும். இதனை வலியுறுத்தியே இளைஞர் போராட்டங்களும் கடந்த நூறு நாள்களுக்கு மேலாக இடம்பெற்று வருகின்றன.

அவர்களின் போராட்டத்தின் விளைவாகவே, புதிய ஜனாதிபதி தெரிவாகி பதவியேற்க முடிந்தது.

எதிர்கால அரசியல் தலைவர்களாக வந்தாக வேண்டிய இந்த இளைஞர் சக்தியை ஒருங்கிணைத்து, அவர்களிடம் இருந்து பொருத்தமானதும் நேர்நிலையானதுமான அபிப்பிராயங்களையும் செயற்றிட்டங்களையும் பெற்று, நாட்டின் முன்னேற்றத்துக்கான பங்காளிகளாக அவர்களையும் மாற்ற வேண்டியது அவசியம் என, அறிக்கையில் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

60 வயதை பூர்த்தி செய்த அரச உத்தியோகத்தர்களை

# இடமாற்ற வேண்டாம்

எம்.எஸ்.எம். ஹனீபா

கிழக்கு மாகாணத்தில் மாகாண சபை நிர்வாகத்துக்குட்பட்ட அரச திணைக்களங்களில் கடமையாற்றும் 60 வயதை பூர்த்தி செய்த அரச உத்தியோகத்தர்களை, வருடாந்த இடமாற்றத்துக்கு உட்படுத்த வேண்டாமென கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளதாக, அகில இலங்கை அரசாங்க பொது ஊழியர் சங்கத்தின் தலைவர் எஸ். லோகநாதன், நேற்று (24) தெரிவித்தார்.

இது தொடர்பாக கிழக்கு மாகாண ஆளுநர் அநுராதா யஹம்பத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ள கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:

அரச உத்தியோகத்தர்களின் கட்டாய ஓய்வுக்கான வயது எல்லை, கடந்த ஜனவரி முதலாம் திகதி முதல் 65ஆக நீடிக்கப்பட்டு,



இது தொடர்பாக அரச நிர்வாக சுற்றறிக்கையும் வெளியிடப்பட்டு, அலுவலகங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

இதன்படி, 60 வயதை பூர்த்தி செய்த அலுவலர்களை இடமாற்றம் செய்யலாமென சுற்றறிக்கையில் தெரிவிக்கப்படவில்லை. மேலும், தற்போது மிக இக்கட்டான காலகட்டத்தில் வாழ்க்கை செலவும் அதிகரித்துள்ள நிலையில், இவ்வாறான இடமாற்றத்தை மேற்கொள்ள நடவடிக்கை எடுத்திருப்பதை நிறுத்துமாறு கோரப்பட்டுள்ளது.

போக்குவரத்து செய்ய முடியாமல் உள்ள நிலையில், அனேகமானவர்கள் நோயாளிகளாக உள்ளனர்.

எனவே, 60 வயதுக்கு மேற்பட்டவர்களை இடமாற்றம் செய்வதை நிறுத்தி, அந்தந்த அலுவலகங்களில் கடமையாற்றுவதற்கு நடவடிக்கை எடுக்குமாறும் அக்கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

முகமாலையில்

## கண்ணிவெடி வெடித்து ஒருவர் படுகாயம்



எஸ்.தில்லைநாதன்

கிளிநொச்சி, பளை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட முகமாலை பகுதியில் கண்ணிவெடி வெடித்ததில் ஒருவர் படுகாயமடைந்துள்ளார்.

முகமாலை பகுதியில் கண்ணிவெடி அகற்றும் பணியில் ஈடுபட்டு வரும் ‘ஹலோ ட்ரஸ்ட்’ ஊழியரே, இவ்வாறு படுகாயமடைந்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

குறித்த பகுதியில் கண்ணிவெடி அகற்றும் பணியில் ஈடுபட்டு வரும் குறித்த நபர், வெள்ளிக்கிழமை (22) மதியம் உணவு அருந்திவிட்டு, கை கழுவும் போது நிலத்தில் பொருள் ஒன்று இருப்பதைக் கண்டுள்ளார்.

அதனை எடுத்து நிலத்தில் குற்றிப் பார்த்தபோது, அது வெடித்துச் சிதறியுள்ளது. இதன்போது குறித்த நபரின் கை சிதறி படுகாயமடைந்துள்ளார்.

இதையடுத்து, கிளிநொச்சி மாவட்ட பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு, மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளார்.

சம்பவம் தொடர்பில் பளை பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

வடமராட்சியில்

## விபத்துகள் அதிகரிப்பு

எம்.றொசாந்த்

சட்டவிரோதமாக மணல் ஏற்றிச் சென்ற வாகனம், இலங்கை போக்குவரத்து சபைக்குச் சொந்தமான பஸ் மற்றும் தனியார் பஸ் ஆகியவற்றுடன் விபத்தை ஏற்படுத்தி விட்டு, அங்கிருந்து தப்பி சென்றுள்ளது.

யாழ்ப்பாணம், பருத்தித்துறை வீதியில் மந்திகை பகுதியில் நேற்று (24) அதிகாலை 5 மணியளவில் இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது. சம்பவம் தொடர்பில் தெரியவருவதாவது:

சட்டவிரோதமான முறையில் மணலை ஏற்றிக் கொண்டு, மிக வேகமாக வந்த கன்ரர் ரக வாகனம், வேகக் கட்டுப்பாட்டை இழந்து, டீசல் பெற காத்திருந்த தனியார் பஸ்ஸின் மீது மோதி விட்டு, அங்கிருந்து தப்பி சென்று, பருத்தித்துறையில் இருந்து கொக்கிளாய் நோக்கி பயணித்துக் கொண்டிருந்த இலங்கை போக்குவரத்து சபைக்குச் சொந்தமான பஸ்ஸுடனும் மோதி தப்பிச்சென்றுள்ளது. இதன்போது எவருக்கும் காயங்கள் ஏற்படவில்லை. குறித்த விபத்து சம்பவங்கள் தொடர்பில், பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். சட்டவிரோத மணல் கடத்தல் காரர்களால் வடமராட்சி பகுதிகளில் விபத்து சம்பவங்கள் அதிகரித்து வருகின்றன.

வீதியில் நடந்து சென்றவர்

## பஸ் மோதியதில் உயிரிழப்பு

செ.கீதாஞ்சன்



முல்லைத்தீவு, கொக்குத்தொடுவாய் பகுதியில் வீதியில் நடத்து சென்றவரை, நேற்று முன்தினம் (23) பஸ் மோதி விபத்தை ஏற்படுத்தியுள்ளது.

இதன்போது படுகாயமடைந்த கொக்குத்தொடுவாய் வடக்கைச் சேர்ந்த 42 வயதுடைய குடும்பஸ்தர், முல்லைத்தீவு மாவட்ட வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வந்த நிலையில் (24) உயிரிழந்துள்ளார்.

மிதிவெடி அகற்றும் பணியாளர்களை ஏற்றிச் சென்ற பஸ்ஸே மேற்படி விபத்தை ஏற்படுத்தியுள்ளதுடன், பஸ்ஸின் சாரதி, முல்லைத்தீவு பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

விபத்து தொடர்பிலான விசாரணைகளை முல்லைத்தீவு பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.



## கிளி. விவசாயிகளுக்கு யூரியா உரம்

சுப்பிரமணியம் பாஸ்கரன்

கிளிநொச்சி மாவட்டத்தில் சிறுபோக செய்கை மேற்கொண்டுள்ள விவசாயிகளுக்கான ஒரு தொகுதி யூரியா உரம், நேற்று (24) வந்தடைந்துள்ளதுடன், அவற்றை உடனடியாக விநியோகிப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதாக கம நல அபிவிருத்தி நிலையம் தெரிவித்துள்ளது.

இந்தியாவிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட யூரியா உரம், ஆரம்பத்தில் கிளிநொச்சி மாவட்டத்துக்கு இரண்டு மெற்றிக் தொன் மாத்திரமே அனுமதிக்கப்பட்ட நிலையில், மாவட்ட அரச அதிபரின் முயற்சியின் பயனாக 222.65 மெற்றிக் தொன் யூரியா கிடைக்கப் பெற்றுள்ளது.

இதையடுத்து, கிளிநொச்சி கமநல சேவை நிலையத்தின் கீழான விவசாயிகளுக்குரிய யூரியா உரம் கொண்டு வரப்பட்டுள்ளது.

குறித்த உரம், கிளிநொச்சி கம நல சேவை நிலையத்தின் களஞ்சியசாலையில் களஞ்சியப்படுத்தப்பட்டு, விவசாயிகளுக்கு உடனடியாக விநியோகிப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதாக கம நல சேவை நிலையம் தெரிவித்துள்ளது.

இ.போ.ச

## யாழ். சாலை ஊழியர்கள் பணிப் பகிஷ்கரிப்பு

வி.நிதர்ஷன்

இலங்கை போக்குவரத்து சபையின் யாழ். சாலை ஊழியர்கள் நேற்று (24) பணிப் பகிஷ்கரிப்பை மேற்கொண்டனர்.

யாழ்ப்பாணம் மத்திய பஸ் நிலையத்துக்கு உள்ளே, வெளியில் இருந்து வருகின்ற பஸ்கள் உள்நுழையாதவாறு தடைகள் ஏற்படுத்தப்பட்டன.

கடந்த 22ஆம் திகதி இரவு 9 மணியளவில், யாழ்ப்பாணத்தில் இருந்து கொழும்பு நோக்கி புறப்பட்ட 57 வழித்தட இ.போ.ச பஸ்ஸின் சாரதி மற்றும் நடத்துநர் ஆகியோர், கல்கமுவ சாலை இ.போ.ச சாலை ஊழியர்களால் தலாதகம எனும் பகுதியில் தாக்கப்பட்டுள்ளனர்.

இந்தத் தாக்குதலை நடத்திய ஊழியர்களுக்கு எதிராக உரிய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்று கோரியே யாழ். சாலை ஊழியர்கள் பணிப்பகிஷ்கரிப்பில் ஈடுபட்டுள்ளனர்.

யானைக்கு வைத்த

## மின்சார வேலியில் சிக்கி முதியவர் பலி

ஏ.எஸ்.சதீஸ்



மட்டக்களப்பு மாவட்டத்தின் வவுணதீவு பொலிஸ் பிரிவுக்குட்பட்ட இருநூறுவில், பாவக்கொடிசேனை பிரதேசத்தில் மின்சாரம் தாக்கி முதியவர் ஒருவர், நேற்று (24) அதிகாலை உயிரிழந்துள்ளார் என வவுணதீவு பொலிஸார் தெரிவித்தனர்.

முதலைக்குடா, கொக்கட்டிச்சோலை பிரதேசத்தை சேர்ந்த இரண்டு பிள்ளைகளின் தந்தையான 71 வயதுடைய கணபதிப்பிள்ளை சின்னத்தம்பி என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

குறித்த பிரதேசத்தில் நபரொருவரின் தோட்ட வளாகம் மாடு, ஆடுகளை பராமரித்து வந்ததாகவும் தோட்டத்தைப் பாதுகாக்கும் பொருட்டு யானைகளுக்கு வைக்கப்பட்டிருந்த மின்சார வேலியில் சிக்கி முதியவர் உயிரிழந்த நிலையில் காணப்பட்டதாக பொலிஸாரின் ஆரம்பகட்ட விசாரணைகளின் போது தெரியவந்துள்ளது.

மட்டக்களப்பு மாவட்ட நீதிமன்ற நீதிவான பீற்றர் போலின் உத்தரவுக்கமைவாக சம்பவ இடத்துக்குச் சென்ற மண்டூர் பிரதேச திடீர் மரண விசாரணை அதிகாரி தம்பிப்பிள்ளை தவக்குமார் சடலத்தைப் பார்வையிட்டார்.


பிரேத பிரிசோதனையின் பின்னர் சடலத்தை உறவினர்களிடம் ஒப்படைகும்படி பொலிஸாருக்கு உத்தரவிட்டார்.

இச்சம்பவம் தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

நைலோன் கயிறு கழுத்தில் இறுகி

## சிறுவன் மரணம்

ஏ.எச்.ஏ. ஹுஸைன்



மட்டக்களப்பு பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பாரதி வீதியை அண்டியுள்ள இடத்தில் வசித்த மதிவாணன் ஜதுசனன் என்ற 11 வயதுச் சிறுவன், நைலோன் கயிறு கழுத்தில் இறுகி உயிரிழந்த சம்பவம், வெள்ளிக்கிழமை (22) மாலை இடம்பெற்றுள்ளது.

வீட்டு விறாந்தையின் கூரையில் தராசில் பொருட்களை நிறுப்பதற்கான நைலோன் கயிறு கட்டப்பட்டிருந்தது. அந்தக் கயிற்றில் சிறுவன் விளையாடிக் கொண்டிருந்துள்ளான். அப்போது தாய், வீட்டுக்குள் வேலை செய்து கொண்டிருந்துள்ளார். தனிமையில் விளையாடிக் கொண்டிருந்த சிறுவனின் நடமாட்டம் கேளாது போகவே, தாய் வீட்டுக்குள் இருந்து வெளியே வந்து பார்க்கும்போது, சிறுவன் கழுத்து இறுகி உயிரிழந்திருந்தமை தெரிய வந்துள்ளது.

உயிரிழந்த சிறுவனின் சடலம், உடற் கூறாய்வுக்காக மட்டக்கயப்பு போதனா வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டது. இந்தச் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை மட்டக்களப்பு தலைமையக பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

ஜதுசனன், மட்டக்களப்பு, தாண்டவெண்வெளி புனித ஜோசப் வாஸ் வித்தியாலயத்தில் தரம் 5 இல் கல்வி பயின்ற மாணவன் ஆவார்.





ஏனையவர்களை தவிர்க்க

## புதிய முறைமையை அமல்படுத்தவும்

வி.சுகிர்தகுமார்

பொதுமக்களுக்கு பெற்றோல் வழங்கும் போது, ஏனையவர்கள் உள்வாங்கப்படுவதைத் தவிர்க்க அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என ஆலையடிவேம்பு மக்கள் கேட்டுக்கொண்டுள்ளனர்.

ஆலையடிவேம்பு பலநோக்குக் கூட்டுறவுச் சங்க எரிபொருள் விற்பனை நிலையத்தில் பெற்றோல் தீர்ந்தமையால் கவலையுடன் கலைந்து சென்ற பொதுமக்கள், இருமுறை பெற்றோல் பெறமுடியாத வகையில், ஏதாவது ஒரு சிஸ்டத்தை அமல்படுத்தவில்லை எனில் தொடர்ந்தும் தாங்கள் பாதிக்கப்படுவோம் எனவும் தெரிவித்தனர்.

நேற்று முன்தினம் (23) இரவு, அக்கரைப்பற்று பொலிஸாரின் மேற்பார்வையோடு பெற்றோல் விநியோகிக்கப்பட்டது. அத்துடன், பெண்களுக்கு ஒரு வரிசையிலும் பொலிஸாருக்கு ஒரு வரிசையிலும் பெற்றோல் வழங்கப்பட்டது.

0, 1, 2 வாகன இறுதி இலக்கத்தை தாண்டி, வேறு சில இலக்க வாகனங்களுக்கும் பெற்றோல் வழங்கப்பட்டது.

குறித்த எரிபொருள் நிலையத்துக்கு ஒரு மாதகாலத்துக்கு மேலாக பெற்றோல் வழங்கப்படாத நிலையில், நேற்று முன்தினம் வழங்கி வைக்கப்பட்டிருந்தது.

எரிபொருள் நிரப்பலில் முறைகேடு:

## வீதியை மறித்த பொதுமக்கள்

எம்.எம்.அஹமட் அனாம்

கோறளைப்பற்று மத்தி பலநோக்கு கூட்டுறவுச் சங்கத்தின் எரிபொருள் நிரப்பு நிலையத்தில் முறைகேடு இடம்பெறுவதாக கூறி, வீதியை மறித்து நேற்று (24) காலை பொதுமக்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

குறித்த எரிபொருள் நிரப்பு நிலையத்தில் 0, 1, 2 என்ற வாகன இறுதி இலக்கத்தின் அடிப்படையில் நேற்று முன்தினம் முதல் எரிபொருள் விநியோகிக்கப்பட்ட நிலையில் நேற்று அதிகாலை 3 மணியுடன் பெட்ரோல் முடிவடைந்துள்ளதாகக் கூறி, எரிபொருள் நிரப்பு நிலையத்தை மூடிச் சென்று விட்டனர்.

இதனால் அங்கு வரிசையில் காத்திருந்த பலருக்கு பெற்றோல் கிடைக்காத நிலையில, பொதுமக்கள் வீதியை மறித்து போராட்டத்தில் ஈடுபட்டனர்.



தம்புள்ள பொருளாதார மத்திய நிலையத்துக்கு

## தாராளமாக கிடைக்கும் மரக்கறிகள்

காஞ்சன குமார

தம்புள்ள பொருளாதார மத்திய நிலையத்துக்கு நேற்றுமுன்தினம் (23) அதிகாலை தொடக்கம், அதிகமான மரக்கறிகள், பழவகைகள் கிடைத்து வருவதாக தம்புள்ள பொருளாதார மத்திய நிலைய வியாபாரிகள் தெரிவித்தனர்.

எரிபொருள் நெருக்கடி காரணமாக, கடந்த சில மாதங்களாக தம்புள்ள பொருளாதார மத்திய நிலையத்துக்கு, குறைந்தளவு மரக்கறிகளே கிடைத்து வந்ததாகவும் தற்போது எரிபொருள் விநியோகத்தில் முன்னெடுக்கப்பட்ட சில வேலைத்திட்டங்கள் காரணமாக, நாட்டின் வேறு பிரதேசங்களிலிருந்து தம்புள்ள பொருளாதார மத்திய நிலையத்துக்கு கிடைக்கும் மரக்கறிகளின் தொகை அதிகரித்துள்ளதாகவும் தெரிவித்தனர்.

அத்துடன் மரக்கறிகளின் விலைகளும் 30 - 40 சதவீதம் வீழ்ச்சியடைந்து உள்ளதாகவும் எரிபொருள் பிரச்சினை மேலும் குறைவடையுமானால் மரக்கறிகளின் விலைகள் மேலும் வீழ்ச்சியடையும் எனவும் தம்புள்ள பொருளாதார மத்திய நிலையத்தின் வியாபாரிகள் தெரிவித்தனர்.

நான்கு மாதங்களின் பின்னர்

## மெராயாவுக்கு சமையல் எரிவாயு

ஆ.ரமேஸ்

லிந்துலை, மெராயா நகருக்கு நான்கு மாதங்களின் பின்னர், நேற்று (24) காலை லிட்ரோ சமையல் எரிவாயு விநியோகிக்கப்பட்டது.

குறித்த 12.5 கிலோ கிராம் சமையல் எரிவாயு 5,100 ரூபாய்க்கு விற்பனை செய்யப்பட்டதாக நுகர்வோர் தெரிவித்தனர்.

வரிசைகளில் 500க்கும் அதிகமானவர்கள் காத்திருந்த போதும், மெராயா நகரிலுள்ள விற்பனை முகவர் நிலையத்துக்கு 350 சிலிண்டர்களே அனுப்பி வைக்கப்பட்டிருந்ததாகத் தெரிவிக்கப்பட்டது.

இந்த நிலையில், நேற்றைய தினம் சமையல் எரிவாயுவைப் பெற்றுக்கொள்ள முடியாதவர்களுக்கு அடுத்து வரும் வாரங்களில் விநியோகிக்க நடவடிக்கை எடுக்கப்படுமென அறிவித்ததையடுத்து வரிசையில் இறுதியாக நின்றிருந்தவர்களில் சுமார் 200க்கும் மேற்பட்டவர்கள் கலைந்து சென்றனர்.



இலங்கை தேசிய தோட்டத் தொழிலாளர் சங்கம்

## ஐ.தே.க வசமாகும்

ரவீந்திரன் நம்பிக்கை



இலங்கை தேசிய தோட்டத் தொழிலாளர் சங்கம், மிக விரைவில் ஐக்கிய தேசிய கட்சியின் வசமாகும் என அக்கட்சியின் மஸ்கெலியா பெருந்தோட்டத்துறை அமைப்பாளரும் அம்பகமுவ பிரதேச சபையின் முன்னாள் தலைவரும் முன்னாள் மத்திய மாகாண சபை உறுப்பினரும் இலங்கை தேசிய தோட்டத் தொழிலாளர் சங்கத்தின் பிரதி தலைவருமான முருகையா ரவீந்திரன் தெரிவித்துள்ளார்.

ஐக்கிய தேசிய கட்சியின் ஓர் அங்கமாக இயங்கிய இலங்கை தேசிய தோட்டத் தொழிலாளர் சங்கம், கடந்த இரண்டு வருடங்களாக தனிப்பட்ட ஒருவரால் சொந்தம் கொண்டாடப்படுகிறது. இதற்கு எதிர்ப்பு தெரிவித்து, உயர்நீதிமன்றத்தில் ஐக்கிய தேசிய கட்சியால் தொடரப்பட்ட வழக்கின் தீர்ப்பு, ஓகஸ்ட் மாதம் 25ஆம் திகதி வழங்கப்படவுள்ளது.

இந்நிலையிலேயே அவர் மேற்கண்டவாறு கருத்துத் தெரிவித்துள்ளார்.

ஐக்கிய தேசிய கட்சியோடு இலங்கை தேசிய தோட்ட தொழிலாளர் சங்கம் மீண்டும் இணைந்து செயலாற்றுமென நம்பிக்கை வெளியிட்டார்.

இந்தச் சங்கத்துக்கு 2016ஆம் ஆண்டு, தற்காலிக பொதுச் செயலாளராக நியமிக்கப்பட்ட ஒருவர், தற்போது தான்தான் நிரந்தர பொதுச் செயலாளரென கூறுகின்றார்.

இலங்கை தேசிய தோட்டத் தொழிலாளர் சங்கத்தில் பொதுச் செயலாளராக இருந்த முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் அமரர் கே. வேலாயுதம் மறைந்த பின்னர், அவரின் இடத்திற்கு நிரந்தர பொதுச்செயலாளரை நியமிக்கும் வரை தற்காலிக பொதுச் செயலாளராக அவர் நியமிக்கப்பட்டார். இந்தத் தொழிற்சங்கம் தனக்குத்தான் என உரிமை கோரிவருகின்றார். அவரை, எவரும் நிரந்தரமான பொதுச் செயலாளராக நியமிக்கவில்லை. அவருக்கு எதிராக வழக்கு தொடரப்பட்டு உள்ளது.

மலையக மக்களின் சந்தாப்பணம் உட்பட, மலையக மக்களுக்காக ஆரம்பிக்கப்பட்ட இத்தொழிற்சங்கத்தை தன் சுகபோகத்திற்காக பயன்படுத்தி வருவதாகவும் ரவீந்திரன் குற்றம் சுமத்தியுள்ளார்.

## இலக்கத்தகடை மாற்றியவர் கைது

ரஞ்சித் ராஜபக்‌ஷ




தனது மோட்டார் சைக்கிளுக்கு போலியான வாகன இலக்கத்தகடை காட்சிப்படுத்தி, எரிபொருள் பெற்றுக்கொள்ள முயற்சித்த இளைஞர் கைதுசெய்யப்பட்டுள்ளார். நோர்வூட் நகரிலுள்ள மஸ்கெலியா பல்நோக்கு கூட்டுறவு எரிபொருள் நிரப்பும் நிலையத்தில் வைத்தே அவர் கைது செய்யப்பட்டார்.

அந்த எரிபொருள் நிரப்பும் நிலையத்துக்கு 3,300 லீற்றர் பெற்றோல் ஜூலை 23ஆம் திகதி வந்தது. வாகன இலக்கங்களின் இறுதி எண்களான 0- 3 இலக்கங்களைக் கொண்ட வாகனங்களுக்கு மட்டுப்படுத்தப்பட்ட அளவில் எரிபொருள் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது.

இந்த நிலையில் கம்பளை பகுதியைச் சேர்ந்த 27 வயதுடைய இளைஞன், தனது மோட்டார் சைக்கிளுக்கு போலி வாகன இலக்கத்தகடை பொருத்தி, எரிபொருளை பெற்றுக்கொள்ள முயற்சித்துள்ளார்.

அங்கு கடமையில் இருந்த நோர்வூட் பொலிஸ் நிலைய அதிகாரிகள் இருவர், வாகன இலக்கத்தகடை பரிசோதித்த அது போலியானதென கண்டறிந்துள்ளனர்.

இதையடுத்து சந்தேகத்தின் பேரில் அவர் கைது செய்யப்பட்டு, பின்னர் பொலிஸ் பிணையில் விடுவிக்கப்பட்டார்.

நோர்வூட் பிரதேசத்திலுள்ள சுற்றுலா விடுதியொன்றில் பணியாற்றும் அவ்விளைஞனுக்கு எதிராக, ஹட்டன் நீதவான் நீதிமன்றில் வழக்கு தொடர நோர்வூட் பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

ரயில் கூரையில் ஏறிய பயணிகள்

## பலவந்தமாக இறக்கப்பட்டனர்

ரயில் பயணிகளின் எண்ணிக்கை அதிகரித்ததால், ரயில் பெட்டிகளின் கூரைகளில் ஏறி பயணத்தை தொடர முயற்சித்த ரயில் பயணிகள், கூரையிலிருந்து இறக்கப்பட்ட சம்பவம், ஹட்டன் ரயில் நிலையத்தில் பதிவானது.

ரயில் நிலைய அதிபர்கள் முன்னெடுத்த பணிபகிஷ்கரிப்பு காரணமாக, நேற்று முன்தினம் (23) ரயில் அனுமதிச்சீட்டுகள் விநியோகிக்கப்படவில்லை. இந்நிலையில், அதிகளவான பயணிகள் ரயில் நிலையத்தில் காத்திருந்தனர்.

இதன்போது பதுளையிலிருந்து கொழும்பு வரை பயணித்த ‘உடரட்ட மெனிகே’ ரயிலில் போதுமானளவு ரயில் பெட்டிகள் காணப்படாமையால் ரயிலுக்காக காத்திருந்த பயணிகள், ரயில் பெட்டிகளின் கூரைமீது ஏறி பயணத்தை ஆரம்பித்தனர்.



எனினும், ரயில் பெட்டிகளின் கூரை மீதேறி, பாதுகாப்பற்ற பயணத்தை தொடர்ந்த பயணிகள், ஹட்டன் ரயில் நிலைய பணியாளர்களால் கூரையிலிருந்து கீழிறக்கப்பட்டனர்.

## கிலனுஜி தோட்டத்தில் சுகாதார செயலமர்வு

செ.தி பெருமாள்

சாமிமலை, கிலனுஜி தோட்டத்தில் சுகாதார செயலமர்வு நேற்றுமுன்தினம் (23) நடத்தப்பட்டது.

தோட்டத்தின் பிரதான காரியாலயத்தில் நடைபெற்ற இச்செயலமர்வில், வேலைத் தளங்களில் ஏற்படும் விபத்துகள், குளவி கொட்டு போன்றவற்றில் இருந்து தம்மை பாதுகாத்துக் கொள்வது சம்பந்தமாகவும் ஏனைய உடல் உபாதைகள் ஏற்படும் தருணத்தில் அதிலிருந்து எவ்வாறு பாதுகாத்து கொள்வது போன்ற விடயங்கள் குறித்தும் தெளிவூட்டப்பட்டது.

கிலனுஜி தோட்ட நிர்வாகத்தால் ஒழுங்கு செய்யப்பட்ட குறித்த செயலமர்வில், மஸ்கெலிய பிரதேச வைத்தியசாலையின் உதவி வைத்திய அதிகாரி, டிலக்‌ஷி தோட்ட வைத்திய உதவியாளர் புனேஷ்வரன், தோட்ட பணியாளர்கள், வெளிக்கள உத்தியோகத்தர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.



தேயிலை கொழுந்துடன்

## ஆற்றில் கவிழ்ந்த லொறி

எஸ்.கணேசன்

தேயிலை கொழுந்து ஏற்றிச் சென்ற லொறி, கடியலென ஆற்று பகுதியில் குடைசாய்ந்து விபத்துக்குள்ளாகியது. அதில், படுகாயமடைந்த லொறியின் சாரதி நாவலப்பிட்டி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இந்த விபத்து நேற்றுமுன்தினம் (23) இரவு 8 மணியளவில் இடம்பெற்றதாக அந்தத் தோட்ட மக்கள் தெரிவிக்கின்றனர்.

கெட்டபுலா, ஐகடியலென தோட்டப் பகுதியில் இருந்து கெட்டபுலா தோட்டத்திற்கு தேயிலை கொழுந்து ஏற்றிச் சென்ற லொறியே, இவ்வாறு வீதியை விட்டு விலகி விபத்துக்குள்ளானதாக நாவலப்பிட்டி பொலிஸார் தெரிவித்தனர்.

லொறியின் தடுப்புக்கட்டை (பிரேக்) திடீரென செயலிழந்ததன் காரணமாக, பின்னோக்கி வந்து, கொத்மலை நீர்தேகத்துக்கு நீர் வழங்கும் கடியலென ஆற்றுப்பகுதியில் குடைசாய்ந்துள்ளது. இவ்விபத்து தொடர்பில் மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.




இலக்கங்களால்

## மாணிக்கக்கல் அகழ்வும் பாதிப்பு

ராமு தனராஜா

வாகனத்தின் இறுதி இலக்கத்தின் அடிப்படையில் எரிபொருளை விநியோகிக்க எரிசக்தி அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளதால் பல தொழிற்றுறையினர் பெரும் அசௌகரியத்துக்கு உள்ளாகியுள்ளனர்.

அரசாங்கத்தின் இவ்வாறான நடவடிக்கையால், கொள்கலன்கள் மூலம் எரிபொருளைப் பெற்று தொழில்முறை செயற்பாடுகளை முன்னெடுக்கும் மாணிக்கக்கல் அகழ்வு உள்ளிட்ட ஏனைய சில தொழிற்றுறையினர் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளனர்.



குறிப்பாக, அகழ்வுப் பணியில் ஈடுபடுத்தப்படும் கனரக வாகனங்கள் (சங்கிலியில் இயங்கும் டோசர்) போன்ற எஞ்சின் இயந்திரங்களை இயக்குவதற்கான எரிபொருள் கிடைக்காத நிலை ஏற்பட்டுள்ளது. மாணிக்கக்கல் அகழ்வில் ஈடுபடும் எஞ்சின் இயந்திரங்களுக்கு, எரிபொருள் இன்மையால் தமது தொழில் முடங்கியுள்ளதாக இத்துறை சார்ந்த தொழிலாளர்கள் தெரிவிக்கின்றனர்.

சாதாரணமாக ஒரு தடவை எரிபொருளை நிரப்பிக்கொள்ள பிரதான பாதைகளுக்கு குறித்த எஞ்சின் கனரக இயந்திரங்களை செலுத்திச் செல்வது கடினமாக இருப்பதாகவும் குறித்த எஞ்சின் இயந்திரங்களைப் பாரிய வாகனங்களில் ஏற்றியே எரிபொருள் நிரப்பு நிலையத்துக்கு கொண்டு செல்ல வேண்டும்.

இவ்வாறு கொண்டு செல்வதற்கும் டீசல் இல்லை என்று தெரிவிக்கும் இத்தொழிலாளர்கள், குறித்த வாகன இலக்க நடைமுறையால் தமது தொழில் பாதிப்படைந்து உள்ளதாகவும் தெரிவித்தனர்.

## பறவைகள் வளர்த்த 2 பெண்கள் கைது

மஹேஸ் கீர்த்திரத்ன

பாதுகாக்கப்பட வேண்டிய உயிரினங்களாகக் கருதப்படும் கிளி, குருவிகளை சட்டவிரோதமாக வளர்த்து வந்த பெண்கள் இருவர், கைதுசெய்யப்பட்டுள்ளனர் என மாத்தளை ரஜ்ஜம்மன வனஜீவராசிகள் அலுவலகம் தெரிவித்துள்ளது.

வனஜீவராசிகள் திணைக்கள அதிகாரிகளுக்கு கிடைத்த தகவலுக்கமைய, மாத்தளை, கவுடுபெலல்ல பிரதேசத்தில் முன்னெடுக்கப்பட்ட சுற்றிவளைப்பின் போது, இருவரும் சந்தேகத்தின் பேரில் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

வனவிலங்குகள் பாதுகாப்பு கட்டளைச் சட்டத்தை மீறும் வகையில் குறித்த பறவையினங்கள் கூடுகளில் அடைத்து, சட்டவிரோதமாக வளர்க்கப்பட்டுள்ளதாக அதிகாரிகள் சுட்டிக்காட்டினர்.



கைதுசெய்யப்பட்ட பெண்கள் இருவரும், மாத்தளை நீதவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்படவுள்ளனர்.

## ஒன்பது சீமெந்து மூடைகள் மாயம்

செ.தி பெருமாள்

ஹொரண பிளான்டேசனுக்குரிய சாமிமலை, பெயர்லோன் தோட்டத்திலுள்ள லயன் குடியிருப்புகளின் வடிகான்களை அமைப்பதற்கு கொண்டு வரப்பட்ட சீமெந்து மூடைகளில் ஒன்பது சீமெந்து மூடைகள் திருடப்பட்டுள்ளன.

இது தொடர்பில், அந்தத் தோட்டத்தின் உதவி முகாமையாளர், மஸ்கெலியா பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளார்.

நீண்ட காலமாக செப்பனிடப்படாமல் உள்ள லயக் குடியிருப்புகளிலுள்ள வடிகான்களை புனரமைக்கும் பணிகள் முன்னெடுக்கப்பட்டு வந்தன. அப்பணிகளுக்காக கொண்டுவரப்பட்ட சீமெந்து மூடைகளிலேயே ஒன்பது மூடைகள் காணாமல் போயுள்ளன. சீமெந்து மூடைகளை திருடிய இருவர் அடையாளம் காணப்பட்டுள்ளனர். அந்தத் தோட்டத்தைச் சேர்ந்த தொழிலாளர்களான இருவரையும் கைது செய்து ஹட்டன் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்த உள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

ஹட்டன் டிப்போவில்


## பாடசாலை சேவைகளுக்கு எரிபொருள் முன்னுரிமை

ரஞ்சித் ராஜபக்‌ஷ

பாடசாலை சேவையில் ஈடுபடும் வான்கள், பஸ்களுக்கான எரிபொருள் விநியோகம், இலங்கை போக்குவரத்து சபைக்கு சொந்தமான டிப்போக்களில் முன்னெடுக்கப்படுகின்றன.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் ஆலோசனைக்கமையவே எரிபொருட்கள் வழங்கப்படுகின்றன. இதற்கமைய பாடசாலை சேவைகளில் ஈடுபடும் வாகனங்களுக்கான எரிபொருள் விநியோகம், ஹட்டன் டிப்போவில் நேற்று (24) முன்னெடுக்கப்பட்டது.

இதற்கு மேலதிகமாக, ஹட்டன் தனியார் பஸ் தரிப்பிடத்திலிருந்து குறுகிய மற்றும் நீண்ட தூர சேவையில் ஈடுபடும் தனியார் பஸ்களுக்கு மட்டுப்படுத்தப்பட்ட அளவில் ஹட்டன் டிப்போவில் எரிபொருள் விநியோகிக்கப்பட்டது.



‘கோட்டா கோ கம’

## கண்டி கிளை அகற்றப்பட்டது

சேஹ்ன் செனவிரத்ன



கண்டி, ஜோர்ஜ் ஆர் டி சில்வா மாவத்தையில் அமைக்கப்பட்டு இருந்த 100 நாள்களைக் கடந்த ‘கோட்டா கோ கம’ பேராட்டக் களம் அகற்றப்பட்டுள்ளது. அந்தப் போராட்டக்களத்தை உருவாக்கியவர்களே அதனை அகற்றியுள்ளனர். கண்டி, ஸ்ரீ தலதா மாளிகையின் வருடாந்த பெரஹெர உற்சவம் ஆரம்பமாகவுள்ள நிலையில், போராட்டக்களத்தை அகற்றுமாறு பொலிஸார் விடுத்த கோரிக்கைக்கு அமையவே அகற்றப்பட்டுள்ளது.

இது தொடர்பில் போராட்ட கள செயற்பாட்டாளரான திமுது அபேகோன் கருத்து தெரிவிக்கையில், “தற்காலிகமாக இந்தக் களத்தை அகற்றியுள்ளோம். தற்போதைய ஆட்சியாளர்கள், மக்கள் எதிர்ப்பு ஆட்சியை முன்னெடுக்கும் சந்தர்ப்பத்தில், இவ்வாறான போராட்ட களமொன்று எதிர்காலத்தில் உருவாக்கப்படும்” என்றார்.

# அவசரநிலை பிரகடனத்தை அலட்சியப்படுத்தி விடாதீர்கள்

கொரோனா தொற்றால் மூன்று வருடங்களுக்கு மேலாக, உலக நாடுகளே அல்லல்பட்டுக்கொண்டிருக்கும் நிலையில், மற்றுமொரு தொற்றுத் தொடர்பில் எச்சரிக்கை விடுத்திருக்கும் உலக சுகாதார அமைப்பு, அவசர நிலையையும் பிரகடனப்படுத்தி உள்ளது.

இந்தப் பிரகடனம், கொரோனாவில் இருந்து முழுமையாக மீண்டெழ முயற்சி செய்து கொண்டிருக்கும் நாடுகளுக்கும், ஏனைய நாடுகளுக்கும் பெரும் பேரிடியாக அமைந்துள்ளது. கொரோனா வைரஸின் தாயகமென கருதப்படும் சீனாவிலும் கொரோனாவின் தாக்கம் இன்னும் தலைவிரித்து ஆடிக்கொண்டிருக்கின்றது.

சீனாவில் உள்ளூர் தடுப்பூசித்திட்டத்தை ஊக்குவிக்கும் செயற்பாடுகள் இன்னும் முன்னெடுக்கப்படுகின்றன. அங்கு, ஒருவருக்கு கொரோனா வைரஸ் தொற்றியிருப்பது உறுதிப்படுத்தப்பட்டால், அவர் வாழும் பிரதேசம் அல்லது நகரம் முழுமையாக மூடப்பட்டுவிடும். அந்தளவுக்கு கடுமையான தாக்கத்தை, இந்தக் கொரோனா செலுத்திக்கொண்டிருக்கின்றது.

நமது நாட்டைப் பொறுத்த வரையில், கொரோனாவுக்கான தடுப்பூசி ஏற்றும் நடவடிக்கை, இன்னும் முன்னெடுக்கப்படுகின்றது. நான்காவது தடுப்பூசியும் ஏற்றப்படுகின்றது. எனினும், தடுப்பூசியை ஏற்றிக்கொள்ளாமல். வகைகளைத் தேடிக்கொண்டிருப்பவர்களும் இருக்கத்தான் செய்கின்றனர்.

இதற்கிடையே, முகக்கவசமும் முறையாக அணிவதில்லை; வீதிகளிலும் பொது இடங்களிலும் எச்சில் துப்புதல்; வெற்றிலையைக் குதப்பி துப்புவது போன்ற நோய்கள் பரவக் காரணியான செய்பாடுக்ள பரவலாக இடம்பெறுகின்றன. சமூக இடைவெளியை காண்பது அரிது. சில நிறுவனங்களில் கடைப்பிடிக்கப்பட்டிருந்த இறுக்கமான நடைமுறைகள் தளர்த்தப்பட்டுள்ளன.

இந்நிலையில்தான், குரங்கு அம்மை நோய் பரவுதல் தொடர்பில், உலக சுகாதார ஸ்தாபனம் அவசர நிலையை பிரகடனப்படுத்தியுள்ளது. இந்த நோயால், இதுவரையிலும் 75 நாடுகளில் 16 ஆயிரம் பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். “குரங்கு அம்மை உலக அச்சுறுத்தலாக உருவெடுத்திருக்கிறது” என, உலக சுகாதார அமைப்பின் தலைவர் டெட்ராஸ் அதானன் கேப்ரியாசஸ் எச்சரித்துள்ளார்.

ஆனாலும், முன்கூட்டியே எச்சரிக்கையாக இருப்பது நல்லது. ஏனெனில், அண்டைய நாடான இந்தியாவிலுள்ள சில மாநிலங்களில் குரங்கு அம்மையால் பாதிக்கப்பட்டவர்கள் இனங்காணப்பட்டுள்ளனர். ஆக, கைக்கு எட்டிய தூரத்திலேயே குரங்கு அம்மை இருக்கிறது என்பதை, நாமெல்லாம் நினைவில் கொள்ளவேண்டும்.

‘குரங்கு அம்மை’ முதன்முதலில், 1970ஆம் ஆண்டில் ஆப்பிரிக்காவின் காங்கோ நாட்டில் முதல்முறையாக கண்டறியப்பட்டது. இந்த நோய் இலகுவில் தொற்றக்கூடியது அல்ல என தெரிவிக்கப்பட்டிருந்தாலும், விழிப்பாகவும் சுகாதார நடைமுறைகளை பின்பற்றியும் வாழவேண்டிய நிலைமைக்குள் நாமிருக்கின்றோம்.

கொரோனா, அதற்குப் பின்னரான பொருளாதார நெருக்கடியில் இருந்து மீண்டெழுவதற்கு திணறிக்கொண்டிருக்கும் நிலையிலும் மருந்துகளுக்கு கடும் தட்டுப்பாடுகள் நிலவும் இவ்வாறான தருணத்தில், மற்றுமொரு தொற்றுநோய்க்கு முகக்கொடுக்கும் நிலைமையில் நாடு இல்லையென்பதை புரிந்துகொள்ளவேண்டும்.

என்றாலும், வந்த பின்னர் தடுமாறுவதை விடவும் வருமுன்னரே காப்பதே சிறந்தது. ஆகையால், முன்கூட்டியே வழிகாட்டல்களைத் தயாரித்து, அவற்றை அமல்படுத்த வேண்டிய தார்மீகக் கடமையும் பொறுப்பும், சுகாதார அமைச்சிடமே இருக்கின்றது என்பதை நினைவூட்டுகின்றோம்.


தமிழ்Mirror க்கு எழுதுங்கள்

www.tamilmirror.lk

தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருதுகளையும் வரவேற்கின்றோம்.

அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136

Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk






## வாழ்வியல் தரிசனம்

காதலர்கள் தங்கள் காதலை ஒரு வரலாறு போல் சொல்வார்கள். ஆழமான காதலுக்குள் இடம்பெற்ற எதிர்ப்புகள், போராட்டங்கள் எனப் பல சம்பவங்கள் இந்தக் கதைக்குள் வரலாம். இந்தக் கதைகள் தொடர்கதைகள், திரைப்படங்களின் கதைகள் போன்றவை போல் சுவாரஷ்யமானவையாக இருக்கலாம்.

காதல் என்பது இதய சங்கமம். அதை அனுபவிப்பவர்களுக்கே அதன் தன்மை புரியும் என்பார்கள். பெரியோர்கள், பெற்றோர்கள் நிச்சயித்து திருமணம் செய்து கொள்ளும் தம்பதிகளுக்கு, காதல் திருமணம், காதல் குறித்து என்ன தெரியும் என, சில காதல் ஜோடிகள் கேட்பதுண்டு. இது வேடிக்கையாக இருக்கும்.

அன்பைப் பரிமாறி, ஆழமாக நெஞ்சில் பதிப்பவை எல்லாம் காதல்தான். காதல் மூலம் தான், அனுபவம் கிடைக்கும் என்பது குறித்து அவர்களுக்குத் தெரியாது.

குடும்பத்தில் இல்லற வாழ்வில், பூரண திருப்தியுடன் அன்போடு இணைந்தால், அதைவிட வேறு என்ன காதல் இருக்கப்போகின்றது? மாறா இல்வாழ்வு, வருங்கால சந்ததிகளுக்கு நல்லறிவைத் தரும்; அனுபவங்களை உண்டுபண்ணும்.

அன்பான குடும்ப உறவு, நிர்மலமான பிணைப்பு. இளமையிலும் முதுமையிலும் காதல் நிரந்தரம்.

–பருத்தியூர் பால. வயிரவநாதன்

# ஜனாதிபதி தெரிவும் தமிழ்க் கட்சிகளும்




என்.கே. அஷோக்பரன்

Twitter: @nkashokbharan


இலங்கையினுடைய எட்டாவது நிறைவேற்று அதிகாரமுள்ள ஜனாதிபதியாக, அரசியலமைப்பின் 40ஆவது சரத்தின்படி, பாராளுமன்ற உறுப்பினர்களிடையேயான இரகசிய வாக்கெடுப்பின் மூலம், ரணில் விக்கிரமசிங்க தெரிவுசெய்யப்பட்டு, பதவியேற்றிருக்கிறார். பல திருப்புமுனைகளோடு, மிக விறுவிறுப்பாக இந்த ஜனாதிபதி தெரிவு அரங்கேறியிருக்கிறது.

இந்த ஜனாதிபதி தெரிவின் போதான தமிழ்க் கட்சிகளின் நிலைப்பாடுகள், நடவடிக்கைகள் என்பவற்றை, மீள்பார்வை செய்வதே இந்தப் பத்தியின் நோக்கமாகும்.

இன்றுள்ள பாராளுமன்றத்தைப் பொறுத்தவரையில், கூட்டணிக் கட்சிகள் உள்ளடங்கலாக, ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுன சார்பில் போட்டியிட்டு, பாராளுமன்றம் ஏகிய உறுப்பினர்களின் எண்ணிக்கை 145 ஆகும். இதோடு, பொதுஜன பெரமுன அரசாங்கத்தோடு இணைந்த கட்சிகளாயினும், தமது கட்சி சின்னத்தில் போட்டியிட்டு, பாராளுமன்றம் ஏகிய உறுப்பினர்கள் மூன்று.

ஆகவே, பொதுஜன பெரமுன, இந்தப் பாராளுமன்றத்தில் அசைக்க முடியாத பெரும்பான்மையைக் கொண்டிருக்கிறது என்பதில், மாற்றுக்கருத்து இருக்க முடியாது. கூட்டணிக் கட்சிகள் தனித்துச் செயற்படுவதாக அறிவித்த பின்னரும், பல பாராளுமன்ற உறுப்பினர்கள், குறிப்பாக கோட்டாவின் ‘வியத்மக’ குழுவிலிருந்து வந்த பொதுஜன பெரமுன பாராளுமன்ற உறுப்பினர்கள், சுயாதீனமாகச் செயற்படுவதாக அறிவித்த பின்னரும் கூட, பொதுஜன பெரமுனவுக்கு கணிசமான பெரும்பான்மை இன்னும் இருக்கிறது என்பதுதான் யதார்த்தம்.

ஆகவே, அந்தப் பெரும்பான்மையை புறக்கணித்து, அரசியல் கணிப்புகளை மேற்கொள்ள முடியாது என்பது அரசியல் பாலபாடம். இந்தப் பின்னணியில்தான், தமிழ்க் கட்சிகள் ஜனாதிபதி தெரிவு தொடர்பில் மேற்கொண்ட தெரிவுகளை, நாம் பார்க்க வேண்டியதாக இருக்கிறது.

ஜனாதிபதி தெரிவுப் போட்டியில், பதில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ, பொதுஜன பெரமுனவின் டளஸ் அழகப்பெரும, ஜே.வி.பியின் அநுர குமார திஸாநாயக்க ஆகியோர் போட்டியிடுவார்கள் என்று எதிர்பார்க்கப்பட்டது. அநுரவுக்கு, அவரது கட்சியிலுள்ள மூன்று வாக்குகளைத் தவிர, வேறு வாக்குகள் கிடைக்கும் என எவரும் எதிர்பார்த்திருக்க முடியாது.

ரணிலுக்கு எதிரான வாக்குகள் சஜித், டளஸ் எனப் பிரியும். ரணில், அறுதிப் பெரும்பான்மையைப் பெற்று வெற்றியீட்டுவார் என்ற நிலை இருந்த போது, வேட்பாளர் முன்மொழிவுக்கு முதல்நாள், டளஸூக்கும், சஜித்துக்கும் இடையில் ஓர் இணக்கப்பாடு ஏற்படுகிறது. அதன்படி, சஜித் ஜனாதிபதி தெரிவுப் போட்டியிலிருந்து விலகிக்கொண்டு, டளஸூக்கு ஆதரவை வழங்கியிருந்தார்.

இதன் பின்னர், முன்பு எவருக்கும் வாக்களிப்பதில்லை என்ற நிலைப்பாட்டைக் கொண்டிருந்த சுதந்திரக் கட்சியும் டளஸை ஆதரிப்பதாக அறிவித்திருந்தது. வாய்ப்பே இல்லை என்றிருந்த டளஸ், வெற்றி பெறப்போவதாக சமூக ஊடகங்களில் கருத்துகள் பரப்பப்பட்டன.

தமிழ்க் கட்சிகளைப் பொறுத்த வரையில், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியானது, 18ஆம் திகதியே தன்னுடைய நிலைப்பாட்டை தெட்டத்தெளிவாக அறிவித்துவிட்டது. “ஜனாதிபதி தெரிவுக்காகத் தம்மை முன்மொழிந்து இருப்பவர்கள், தமிழ் மக்களின் நீண்டகால அரசியல் தீர்வு விடயங்களை முன்னெடுக்கத் தயார் இல்லாதவர்களாகவே உள்ளனர். ராஜபக்ஷ தரப்கை அகற்றி, ஓர் அடிப்படை மாற்றத்துக்காகப் போராடிக் கொண்டிருக்கின்ற இந்தச் சந்தர்ப்பத்தில், ரணில் விக்கிரமசிங்க அதற்கு ஒரு முட்டுக்கட்டையாக இருக்கின்றார். 2015ஆம் ஆண்டு, மைத்திரிபால சிறிசேனவுடன் இணைந்து நடைபெற்ற அவரது ஆட்சிக்காலத்தில், தமிழ் மக்களுடைய இனப்பிரச்சினைக்கான தீர்வு என்ற விடயத்தில், ஒற்றையாட்சிக்கு உட்பட்ட ஓர் இடைக்கால அறிக்கை ஒன்றையே தயாரித்து இருந்தனர். ஐக்கிய தேசிய கட்சி, அதற்கு மட்டும் தான் ஆதரவு தரலாம் என்ற விடயத்தையும் சமஷ்டியையும் தமிழ் மக்களுடைய சுயநிர்ணயத்தையும் நிராகரித்து, அவர்களுடைய செயற்பாடுகள் இன்னமும் அதிலிருந்து விடுபடாமல் இருக்கின்ற நிலையில், அவரை ஏற்க முடியாது. ரணிலை நாங்கள் என்ன காரணத்துக்காக நிராகரிக்கின்றோமோ, அதேநிலைப்பாட்டில் தான் சஜித் பிரேமதாஸாவும் தனது கருத்துகளை தெரிவித்து இருந்தார். அதிகாரப் பகிர்வு தொடர்பில் அவர், எங்களோடு பேசிய பொழுது, இந்தியாவில் உள்ள பஞ்சாயத்து முறையில் பிரச்சினைகள் தீர்க்கப்படும் முறையைக் கூறி, அதைப் போலவே தமிழ் மக்களுடைய பிரச்சினைகள் தீர்க்கப்பட வேண்டும் என்ற கோணத்தில், அவர் தன்னுடைய கருத்தை தெரிவித்திருந்தார். தமிழ் மக்களுடைய இனப்பிரச்சினை சார்ந்த விடயத்துக்கும் பஞ்சாயத்து முறைக்கும் எந்த ஒரு தொடர்பும் இல்லை என்பது, சஜித் பிரேமதாஸவுக்குத் தெரிந்திருக்கவில்லை போலும்” என, தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி தமது நீண்ட அறிக்கையில், தமது நிலைப்பாட்டை பட்டவர்த்தனமாகப் பதிவு செய்திருந்தது.

தமிழ்த் தேசிய கூட்டமைப்போ, வாக்களிப்புக்கு முதல்நாள் இரவுதான் தன்னுடைய முடிவை எடுத்திருந்தது. கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தனின் வீட்டில் சஜித், டளஸ், ஜீ.எல்.பீரிஸ், டிலான் பெரேரா ஆகியோரையும் சந்தித்துப் பேசிய கூட்டமைப்பினர், டளஸை ஆதரிப்பதாக முடிவெடுத்தனர். டளஸ், சஜித் ஆகியோர், அரசியல் கைதிகளின் விடுதலை, தனியார் காணிகள் விடுவிப்பு உள்ளிட்ட கூட்டமைப்பின் 10 முக்கிய கோரிக்கைகளை ஏற்று, ‘எழுத்துமூல உடன்படிக்கை’யில் ஒப்பமிட்டனர் என்று அந்தக் கூட்டத்தின் பின்னர், பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் ஸ்ரீதரன் பகிரங்கமாக வெளிப்படுத்தியிருந்தார்.

ஆனால், இதே செய்தியை ‘டெய்லி மிரர்’ பத்திரிகைத் தளம் பிரசுரித்த போது, அதை ‘குறும்புத்தனமானதும் தவறானதுமான செய்தி’ என்று கூட்டமைப்பின் மற்றொரு பாராளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் குறிப்பிட்டிருந்தார். இதுதான் உண்மையென்றால், அதனை ஏன் மறைக்க வேண்டும்? மக்களின் உணர்வுகளோடு ஊடகங்கள் விளையாடி, வாக்கெடுப்பை தீவிரமாகப் பாதிப்பதற்கு, இது ஒன்றும் மக்கள் வாக்களிக்கும் தேர்தல் இல்லையே? இன்று வரை, அந்த எழுத்துமூல ஒப்பந்தத்தை கூட்டமைப்பு வெளியிடவில்லை என்பதும் இங்கு கவனிக்கப்பட வேண்டியது.

ஆனால், பொதுஜன பெரமுனவை எதிர்க்கும் கூட்டமைப்பு, டளஸை எப்படி ஆதரிக்கலாம் என்ற கேள்வி இங்கு முக்கியமானது. ரணில் விக்கிரமசிங்கவை, ‘ராஜபக்ஷ விசுவாசி’ என்று கூறும் கூட்டமைப்பின் சில பாராளுமன்ற உறுப்பினர்கள், டளஸ் எவ்வளவு பெரிய ராஜபக்ஷ விசுவாசி என்பதனை மறந்துவிட்டார்களா?

ராஜபக்ஷர்களை எதிர்க்கிறோம் என்று சொல்லிவிட்டு, டளஸை ஆதரிப்பதெல்லாம் சின்னப்பிள்ளைத்தனமான அரசியல். அதற்கு அவர், ராஜபக்ஷர்களோடு முரண்பட்டு நிற்கிறார் என்று கூறுவதெல்லாம் சப்பைக்கட்டு. இன்றுவரை டளஸ், பொதுஜன பெரமுன உறுப்பினர் என்பது, இங்கு கோடிட்டுக் காட்டப்பட வேண்டியது!

ஆகவே, இங்கு ‘ரணில் எதிர்ப்பு’ என்ற ஒரு சிலரின் தனிப்பட்ட நிகழ்ச்சிநிரல்தான், கூட்டமைப்பின் நிலைப்பாடாக்கப்பட முயற்சிகள் எடுக்கப்பட்டிருக்கிறன என்பது தெட்டத்தெளிவாகப் புலனாகிறது.

கூட்டமைப்பு, தமிழ் மக்களின் நலன் கருதியோ, கொள்கை சார்ந்தோ தமது முடிவை எடுக்கவில்லை. மாறாக, சிலரின் தனிநபர் வெறுப்பின் அடிப்படையில், தனது முடிவை எடுத்திருக்கிறதோ என்ற எண்ணமே எழுகிறது. இந்த முடிவு தொடர்பில் வெளிப்படையான எதிர்ப்பை, கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர்கள் பலரும் முன்வைக்காது இருந்தாலும், அவர்கள் தனிப்பட்ட ரீதியில் இந்த முடிவை ஏற்றுச் செயற்பட்டார்களா, வாக்களித்தார்களா என்ற கேள்வியும் இங்கு எழுகிறது.

அப்படி இல்லையென்றால், கூட்டமைப்பின் முடிவாக முன்வைக்கப்பட்ட முடிவை, கூட்டமைப்பின் அனைத்து உறுப்பினர்களும் ஏற்கவில்லை என்பதுதான் யதார்த்தமாகிறது. இந்த ஜனாதிபதி தெரிவைப் புறக்கணித்திருந்தால் கூட, கூட்டமைப்பு இப்படி மூக்குடைபட்டு நிற்க வேண்டிய சூழல் ஏற்பட்டிராது.

‘கூட்டமைப்பு என்பது தனிநபர்களின் சொத்தல்ல’ என்பதை, கூட்டமைப்பின் அனைத்துக் கட்சிகளும் அழுத்தமாகச் சொல்லவேண்டிய காலச்சூழல் எழுந்திருக்கிறது. தனிநபர்களின் விருப்பு வெறுப்புகளுக்கு ஏற்றவகையில், கூட்டமைப்பின் நடவடிக்கைகள் அமைய முடியாது; அமையக் கூடாது என்று இனியேனும் அமைதி காக்காது, வெளிப்படையாகப் பேச வேண்டிய காலத்தின் நிர்ப்பந்தம், கூட்டமைப்பின் அனைத்து உறுப்பினர்களுக்கும் ஏற்பட்டிருக்கிறது.

கூட்டமைப்பு என்பது, ஒருவரின் குரலாக மாறிப்போனால், அது கூட்டமைப்பினதும், தமிழ் மக்களினதும் எதிர்காலத்துக்கு ஏற்புடையதல்ல. தனது போக்கை மறுபரிசீலனை செய்ய வேண்டியதொரு சந்தியில், கூட்டமைப்பு நின்று கொண்டிருக்கிறது.

மறுபுறத்தில், நீதியரசர் சீ.வீ.விக்னேஸ்வரன், தமிழ் மக்கள் சார்பில் ஆறு கோரிக்கைகள் அடங்கிய கடிதமொன்றை, ரணில் விக்கிரமசிங்கவிடம் வழங்கியதாகவும், அதன் பின்னரே ரணிலை ஆதரித்ததாகவும் அந்த ஆறு கோரிக்கைகள் என்ன என்பதையும், அவற்றை ரணில் ஏற்றாரா என்பதையும் அவர் தமிழ் மக்களுக்கு வெளிப்படையாகச் சொல்ல வேண்டும்.

வெறுமனே, ‘கூட்டமைப்பு அந்தப் பக்கம் போனால், நான் இந்தப் பக்கம் போவேன்’ என்று ரீதியில் இந்த முடிவு எடுக்கபடவில்லை என்பதை, தமிழ் மக்களுக்கு உணர்த்த வேண்டிய கடமை அவருக்கு இருக்கிறது.

## கடிதங்கள்

### ஹட்டன் நகரசபைக்கு உட்பட்ட பிரதான வீதியில் ‘வெள்ளக்காடு’



முறையான வடிகான் அமைப்புத் திட்டம், பராமரிப்பு இல்லாமல் உள்ளதால், ஹட்டன் நகரில் உள்ள பிரதான வீதியில் மழைக் காலங்களில் வெள்ளம் நிறைந்து காணப்படுகின்றது. இவ்வாறான ஒரு வெள்ளக்காட்டில்தான், சில காலங்களுக்கு முன்னர் சிறுமி ஒருத்தி, விபத்துக்குள்ளாகி மரணித்தார்.

இது குறித்து, ஹட்டன் நகர சபை உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என பொதுமக்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.

கடந்த பல ஆண்டுகளாக, தொடர்ந்து மழை பெய்யும் பட்சத்தில், கழிவு நீர் வடிகான் வழியாகப் பிரதான வீதியில் உள்ள மணிக்கூட்டு சந்தியில் இருந்து, டிக்கோயா வீதியில் டெலிகொம், எம்.ஆர். டவுன், பிரதான பஸ் தரிப்பிடம் ஆகிய பகுதிகளில் இந்தக் கழிவுநீர் வடிகான் நிறைந்து, வழிந்தோடும்போதே இவ்வாறாக வெள்ளக்காடாகி, பொதுமக்களுக்கு உயிரச்சத்தை ஏற்படுத்தி வருகின்றது.

இதனைக் கட்டுப்படுத்த, கழிவு நீர் செல்லும் வடிகான்கள் ஆழப்படுத்தும் பணியை, ஹட்டன் நகர சபை முன்னெடுக்க வேண்டும் என பயணிகள், நகர வர்த்தகர்கள், மாணவர்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.

–பெருமாள்



யூனியன் அஷ்யூரன்ஸ்

# சர்வதேச கௌரவிப்புகளை தனதாக்கியது

யூனியன் அஷ்யூரன்ஸ், நான்கு சர்வதேச விருதுகளை தனதாக்கியுள்ளது. World Economic Magazine இனால் வழங்கப்பட்ட இந்த விருதுகளினூடாக, நிறுவனத்தின் புத்தாக்கம், சேவைச் சிறப்பு போன்ற துறைகளில், முன்னோடியான சாதனைகள் கௌரவிக்கப்பட்டுள்ளன. உலகளாவிய ரீதியில் பல்வேறு தொழிற்றுறைகளைச் சேர்ந்த சிறந்த மற்றும் புத்தாக்கமான செயற்பாட்டாளர்களுக்கு, வருடாந்தம் இந்த விருதுகள் வழங்கப்படுகின்றன.

யூனியன் அஷ்யூரன்ஸ் வெற்றியீட்டியிருந்த விருதுகளில், இலங்கையின் வேகமாக வளர்ந்து வரும் ஆயுள் காப்புறுதி நிறுவனம், இலங்கையில் அதிகளவு விரும்பப்படும் காப்புறுதி நிறுவனம், இலங்கையில் சிறந்த பாங்கசூரன்ஸ் சேவை வழங்குநர், மிகவும் புத்தாக்கமான பாங்கசூரன்ஸ் வெகுமதித் திட்டம் ஆகியன அடங்குகின்றன.

யூனியன் அஷ்யூரன்ஸ் பிரதம நிறைவேற்று அதிகாரி ஜூட் கோம்ஸ் கருத்துத் தெரிவிக்கையில், "வாடிக்கையாளர்களை மையப்படுத்திய தந்திரோபாயம், தூர நோக்குடைய செயற்பாடுகள் போன்றவற்றுக்கான எடுத்துக்காட்டாக, இந்த விருதுகள் அமைந்துள்ளன. சிறந்த சேவைகளை வழங்குவது, புத்தாக்கம், டிஜிட்டல் மயமாக்கம் போன்றவற்றினூடாக, வாடிக்கையாளர்களின் எதிர்பார்ப்புகளை விஞ்சுவதில் நாம் எப்போதும் கவனம் செலுத்துகின்றோம்" என்றார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், "நிறுவனத்தின் வளர்ச்சிக்கு அர்ப்பணிப்புடன் பணியாற்றும் ஊழியர்களுக்கு, இந்தத் தருணத்தில் நன்றி தெரிவிக்கின்றேன். எம்மீது தொடர்ந்து நம்பிக்கை கொண்டு செயலாற்றும் வாடிக்கையாளர்களையும் இந்தத் தருணத்தில் நினைவுபடுத்துகின்றேன். வாடிக்கையாளர் அனுபவத்தை மேம்படுத்துவது தொடர்பில், தொழிற்றுறையில் எப்போதும் யூனியன் அஷ்யூரன்ஸ் முன்னோடியாக அமைந்துள்ளது. தூர நோக்குடைய, டிஜிட்டல் மயமான, மாற்றியமைத்துக் கொள்ளக்கூடிய ஆயுள் காப்புறுதி சேவை வழங்குநராக, இலங்கைக்கு சிறந்த தீர்வுகளைப் பெற்றுக் கொடுக்கின்றது" என்றார்.

இலங்கையில் சேவை வழங்கும், வேகமாக வளர்ந்து வரும் ஆயுள் காப்புறுதி நிறுவனம் என்பதற்கான விருதினூடாக, சிறந்த நிதி வளர்ச்சி உறுதி செய்யப்பட்டுள்ளது. 2021 ஆம் ஆண்டில், தேறிய செலுத்திய தவணைக் கட்டண பெறுமதி ரூ. 15 பில்லியனைக் கடந்திருந்தது. முன்னைய ஆண்டின் பெறுமதியான ரூ. 13 பில்லியனுடன் ஒப்பிடுகையில் இது கவனத்தில் கொள்ளத் தக்க அதிகரிப்பாக அமைந்துள்ளது. வரிக்கு முந்திய இலாபம் ரூ. 1.8 பில்லியனிலிருந்து 46% இனால் அதிகரித்து, ரூ. 2.6 பில்லியனாகப் பதிவாகியிருந்தது. வரிக்குப் பிந்திய இலாபம் ரூ. 921 மில்லியனிலிருந்து ரூ. 2.1 பில்லியனாக அதிகரித்திருந்தது. இது 123% அதிகரிப்பாகும்.


இலங்கையில் அதிகளவு விரும்பப்படும் காப்புறுதி நிறுவனம் எனும் விருதை வெற்றியீட்டியிருந்தமை, மற்றுமொரு சாதனையாக அமைந்துள்ளது. நிதி வளர்ச்சிக்கு மேலதிகமாக, களத்தில் பல்வேறு பிரிவுகளில் யூனியன் அஷ்யூரன்ஸ் முன்னோடியாகத் திகழ்கின்றது. உதாரணமாக, சேவை சிறப்புக்கான நன்மதிப்பைப் பெற்றுள்ளதுடன், பாவனையாளர் நட்புத்திறன், சௌகரியம், அணுகல் திறன் போன்றவற்றை வழங்குகின்றது. நிறுவனம் தனது பணியாற்றும் கலாசாரத்தை மேம்படுத்தி, அதனூடாக ஊழியர்களுக்கு வலுவூட்டுகின்றது.

தொடர்ச்சியாக, ஒன்பது வருட காலமாக இந்நிறுவனம் பணியாற்றுவதற்கு சிறந்த நிறுவனமாக தெரிவாகியிருக்கின்றது. சாதனை மிகுந்த Million Dollar Round Table (MDRT) தகைமையாளர்களை தயார்ப்படுத்தி இருந்ததனூடாக, ஊழியர் விருத்தியில் கொண்டிருக்கும், காண்பிக்கும் அர்ப்பணிப்பு உறுதி செய்யப்பட்டிருந்தது.

யூனியன் அஷ்யூரன்ஸ் வெற்றியீட்டியிருந்த விருதுகள் இரண்டும் பாங்கசூரன்ஸ் பிரிவில் உள்ளடங்குவனவாகும். சிறந்த பாங்கசூரன்ஸ் சேவை வழங்குநர், இலங்கையிலுள்ள மிகவும் புத்தாக்கமான பாங்கசூரன்ஸ் வெகுமதித் திட்டம் ஆகியனவாகும்.

கொமர்ஷல் வங்கியின் 'அருணலு' வெளிநாட்டு நாணய

# சேமிப்புக் கணக்கு



கொமர்ஷல் வங்கி சிறுவர்களுக்கான 'அருணலு' வெளிநாட்டு நாணய சேமிப்பைக் கணக்கை அறிமுகம் செய்துள்ளது. இலங்கை பிரஜைகளாக இலங்கையில் வசிக்கும் சிறுவர்களுக்கு அல்லது வெளிநாடுகளில் குடிபெயர்ந்து வாழும் இலங்கையர்களின் இலங்கையில் பிறப்பு பதிவு செய்யப்பட்ட பிள்ளைகளுக்கு நான்கு வகையான வெளிநாட்டு நாணயங்களில் இந்தக் கணக்குகளைத் திறக்கலாம் என வங்கி அறிவித்துள்ளது.

'அருணலு' வெளிநாட்டு நாணய சிறுவர் சேமிப்புக் கணக்கை பிள்ளைகளின் பெற்றோர்கள், தாத்தா அல்லது பாட்டி அல்லது சட்ட ரீதியான பாதுகாவலர்கள் எந்தவொரு கொமர்ஷல் வங்கிக் கிளையிலும் திறக்கலாம். 15 வயதுக்கு குறைவான சிறுவர்களுக்கு ஆரம்ப கட்டமாக 50 டொலர்களை வைப்புச் செய்து அல்லது அதற்கு சமமான ஸ்டேர்லிங் பவுண், யூரோ அல்லது அவுஸ்திரேலிய டொலர் போன்ற ஏனைய நாணயத்தை வைப்புச் செய்து இந்தக் கணக்கைத் திறக்கலாம். குறிப்பிட்ட பிள்ளையின் 18வது பிறந்த நாளின் பின்னரே இந்தக் கணக்கில் உள்ள மொத்தத் தொகையையும் மீளப் பெறலாம்.

தமது பிள்ளைகளின் வெளிநாட்டு கல்வி போன்ற எதிர்கால செலவுகளைக் கருத்தில் கொண்டு, பெற்றோருக்கு வெளிநாட்டுப் பணத்திலேயே சேமிப்பதற்கான வாய்ப்பை வழங்கும் நோக்கில் இந்த விசேட திட்டம் அறிமுகம் செய்யப்பட்டுள்ளது. எதிர் காலத்தில் நாணய மதிப்பிறக்க ஆபத்தில் இருந்து பாதுகாக்க பெரும் வகையில் இது உதவியாக அமைந்துள்ளது.

இந்தக் கணக்கில் ஏற்றுக் கொள்ளப்படும் பணம் பெற்றோரிடம் அல்லது தாத்தா பாட்டி அல்லது சட்ட ரீதியான பாதுகாவலரிடம் இருந்து கிடைத்த வரவாகப் பதிவு செய்யப்படும். இவர்களின் தனிப்பட்ட வெளிநாட்டு நாணயக் கணக்கில் இருந்து இந்தக் கணக்கிற்கு நிதி மாற்றமாகவும் உரிய தொகையை வைப்பிடலாம்.

பிள்ளைகள் 18 வயதினை அடைந்ததும் இந்தப் பணத்தை வங்கி, இலங்கை நாணயத்தில் வழங்கும். வெளிநாட்டுக் கல்வி, சுகாதாரத் தேவை போன்ற அவசியமான தேவைகளுக்காக ஏற்றுக் கொள்ளப்படும் காரணங்களின் அடிப்படையில், வெளிநாட்டு நாயணத்திலும் இது வழங்கப்படும். அதேபோல் விசேட தேவைகளின் நிமித்தம் வங்கி அனுமதிக்கும் பட்சத்தில் முதிர்ச்சிக்கு முந்திய காலத்திலும் பணத்தை மீளப் பெறலாம்.

சென்னை

# "தேவை இல்லாத சேட்டை"



மறைந்த முன்னாள் முதலமைச்சர் கருணாநிதியின் பேனா நினைவுச் சின்னத்தை வங்கக் கடலுக்குள் அமைக்க, நாம் தமிழர் கட்சியின் ஒருங்கிணைப்பாளர் சீமான் கடும் கண்டனம் தெரிவித்துள்ளார்.

கருணாநிதி பயன்படுத்திய பேனாவை நினைவூட்டும் வகையில், பேனா வடிவிலான நினைவுச் சின்னத்தை கருணாநிதி நினைவிடம் அருகில், வங்க கடலுக்குள் அமைக்க தமிழக அரசு முடிவெடுத்துள்ளது. 42 மீற்றர் (137 அடி) உயரத்தில் பேனா போன்ற நினைவுச்சின்னம், கடலுக்குள் புல்வெளிகள் நடுவில் அமைக்கப்பட இருக்கிறது.


கடலில் பேனா சின்னமும் பாலமும் கருணாநிதியின் நினைவிடத்தின் உள்ளே இருந்து கடலின் மேல் 360 மீற்றர் தூரம் நடந்து சென்று, பேனா நினைவுச் சின்னத்தை பொதுமக்கள் பார்வையிடும் வகையில் பாலம் அமைக்கப்பட உள்ளது.81 கோடி ரூபாவில் பொதுப்பணித் துறையால் அமைக்க அனுமதியும் கிடைத்துள்ளது.

இந்நிலையில், சென்னையில் செய்தியாளர்களிடம் சீமான் கூறியதாவது: கடலில், கருணாநிதியின் பேனா நினைவு சின்னத்தை நிறுவ விட முடியாது. நிறுவ நான் விடப்போவதும் இல்லை. அப்புறம் கண்ணாடி உள்ளே வைப்பீங்க. இப்ப உதயநிதி முதலமைச்சராகிவிட்டால் எங்க அப்பா 'விக்' வைத்திருந்தார் என கடலுக்குள் 'விக்' வைப்பீங்களா? இது எல்லாம் தேவை இல்லாத சேட்டை. இது எல்லாம் யாரு காசு?

பேனா வைக்கிறேன்.. நோட் வைக்கிறேன்னு... ஏய்! நீ சமாதியில் வடை, கோப்பி வைக்கிறதையே திட்டிகிட்டு இருக்கேன் நான். இதெல்லாம் கொழுப்புங்க... இதெல்லாவற்றையும் ஊடகங்கள்தான் பேசனும். எங்கப்பனுக்கு நான் சமாதி கட்டுறேன்; நினைவிடம் கட்டுறேன்; என் காசுல கட்டுறேன். அப்படி கட்டுங்க. அரசு காசில் பேனா வைக்கிறேன்; பென்சில் வைக்கிறேன்... சேட்டை தானே" என்றார்.

பெங்களூர்

## கிளியை பிடித்து கொடுத்தவருக்கு கூடுதல் சன்மானம்



வெள்ளி இறகுகளைக் கொண்ட உயர்ரக கிளியை பிடித்துக் கொடுத்தவருக்கு, அறிவித்ததை விடவும் 35 ஆயிரம் ரூபாய் அதிகமாகக் கொடுத்து மொத்தமாக 85 ரூபாவை, கிளியின் உரிமையாளர்கள் வழங்கிய சம்பவம் பெங்களூரில் இடம்பெற்றுள்ளது.

சில தினங்களுக்கு முன்பாக, காணாமல் போயிருந்த அந்தக் கிளி தொடர்பிலான புகைப்படங்களை சமூக வலைத்தளங்களில் வெளியிட்டிருந்த தம்பதியினர், 50 ஆயிரம் ரூபாய் பரிசு தொகையையும் அறிவித்திருந்தனர்.

அதே பிரதேசத்தில் வசிக்கும் ஒருவருடைய வீட்டுத் தோட்டத்திலுள்ள மரமொன்றில், அந்தக் கிளி அமர்ந்திருப்பதை கண்ட, வீட்டு உரிமையாளர் மற்றுமொருவரின் உதவியுடன் அந்தக் கிளியை பிடித்து, உரிமையாளருக்கு தகவல் கொடுத்துள்ளார். அதையடுத்து, அங்கு விரைந்த உரிமையாளர், அறிவித்ததை விடவும் 30 ஆயிரம் ரூபாய் மேலதிகமாக கொடுத்து கிளியை பெற்றுச்சென்றுள்ளார்.



## நடிகர் ரஜினிக்கு விருது

தமிழ்நாட்டில் அதிகபட்சமாக வருமான வரி செலுத்திய நடிகர் ரஜினிகாந்துக்கு வருமான வரித்துறை சார்பில் ஆளுநர் தமிழிசை சௌந்தரராஜன் விருது வழங்கினார். வருமான வரி தினத்தையொட்டி வழங்கப்பட்ட அந்த விருதை, ரஜினிகாந்துக்கு பதிலாக அவரது மகள் சௌந்தர்யா பெற்றுக் கொண்டார்.

சென்னை



## தமிழகத்தில் இருந்து மூன்றாவது தொகுதி அனுப்பிவைப்பு

தமிழகத்தில் இருந்து இலங்கைக்கு வழங்கப்படும் மூன்றாம் தொகுதி உதவி பொருட்கள் சனிக்கிழமை (23) அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

இந்திய மக்களவை உறுப்பினரும் திராவிட முன்னேற்றக் கழகத்தின் மகளிரணிச் செயலாளர் கனிமொழி கருணாநிதியின் தலைமையில் இதற்கான நிகழ்வுகள் இடம்பெற்றன.

இதற்கமைய 74 கோடி இந்திய ரூபாய் பெறுமதியான உதவி பொருட்கள், இவ்வாறு அனுப்பப்பட்டுள்ளன.

அத்தியாவசிய பொருட்களான அரிசி, பால்மா, மருத்துப் பொருட்கள் என்பன இவ்வாறு தூத்துக்குடி துறைமுகத்தில் இருந்து அனுப்பி வைக்கப்பட்டு உள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இதன்படி, 16 ஆயிரத்து 356 மெற்றிக் தொன் அரிசி, 201 தொன் பால்மா, 39 தொன் நிறையுடைய மருந்து பொருட்கள் என்பன அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

தமிழகத்தில் இருந்து கடந்த மே மாதம் 18ஆம் திகதி முதலாம் தொகுதி உதவி பொருட்கள், இலங்கைக்கு அனுப்பி வைக்கப்பட்டன.

தொடர்ந்து ஜூன் மாதம் 22ஆம் திகதி இரண்டாம் தொகுதி உதவி பொருட்கள் அனுப்பி வைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

மதுரை

## உணவு பழக்க மாற்றமே புதிய நோய்களுக்கு காரணம்



"உணவு பழக்கத்தில் ஏற்பட்ட மாற்றமே, புதிய நோய்களுக்கு காரணம்" என, மதுரை மாவட்ட நிர்வாகம், உணவு பாதுகாப்பு துறை நடத்திய, பாரம்பரிய உணவு குறித்த விழிப்புணர்வு மரதனை ஓட்டத்தை ஆரம்பித்து வைத்த அமைச்சர் மூர்த்தி தெரிவித்தார்.

அமைச்சர் மூர்த்தி பேசியதாவது: "வீட்டில் சமைக்கும் மனப்பான்மை குறைந்து வருகிறது. 30 ஆண்டுகளுக்கு முன்னால் இரசாயனம் பயன்படுத்தாத நெல்லை விவசாயிகள் விளைவித்தனர். மலையில் உள்ள இலை, தழை, கடலை, வேப்பம்புண்ணாக்கை உரம், மருந்தாகப் பயன்படுத்தினர். மண்பானையில் வைக்கும் சோறு கெட்டுப் போகாது. அதில் தண்ணீர் ஊற்றி, பழஞ்சோற்றுத் தண்ணியாக குடித்தபோது சர்க்கரை, இரத்தஅழுத்த நோய்கள் நம்மை அண்டவில்லை.
"உணவுப் பழக்கவழக்கத்தில் ஏற்பட்ட மாற்றம் தான், பல புதிய நோய்களுக்கு காரணம். மீண்டும் பழைமைக்கு மாற வேண்டும். சுவைக்குத் தரும் முக்கியத்துவத்தை விட, உடலுக்கு உகந்ததா என யோசித்து சாப்பிட வேண்டும். விவசாயத்தின் அருமை உணர்ந்து, இளைய தலைமுறையினர் விவசாயதுக்கு மாற வேண்டும்" என்றார்.

புதுடெல்லி

## சமூக ஊடகங்கள் நடத்தும் 'கங்காரு' நீதிமன்றம்



கங்காரு நீதிமன்றம் நடத்தும் சமூக ஊடகங்கள் பொறுப்புடன் நடந்து கொள்ள வேண்டுமென உச்ச நீதிமன்ற தலைமை நீதிபதி என்.வி.ரமணா அறிவுறுத்தியுள்ளார்.

ஜார்க்கண்ட் மாநிலம் ராஞ்சியில் நடந்த கல்வி நிறுவன நிகழ்ச்சியில் கலந்துகொண்டு உரையாற்றிய உச்ச நீதிமன்ற நீதிபதி என்.வி. ரமணா,

"தகவல்களை பரப்பும் திறன் புதிய ஊடகங்களுக்கு அதிகம் உள்ளது. ஆனால், அவற்றுக்கு நல்லவை எவை, தீயவை எவையென அடையாளம் காணத் தெரியாமல் இருக்கிறது. அனுபவம் மிக்க நீதிபதிகளால் கூட, தீர்வை கண்டறிய சிரமப்படும் விடயங்கள் குறித்து, ஊடகங்கள் சில நேரங்களில் விவாத நிகழ்ச்சிகள் மூலம் 'கட்டபஞ்சாயத்து' (கங்காரு நீதிமன்றம்) நடத்துவதை பார்க்கிறோம்" என்றார்.

பிரச்சினைகளுக்கு தீர்வு காண்பதில் ஊடக விவாதங்கள் வழிகாட்டியாக இருக்க முடியாது. நீதி வழங்க வேண்டிய விடயங்களில், தவறான தகவல்கள், கொள்கைகளுடன் கூடிய விவாதங்கள், ஆரோக்கியமான ஜனநாயகத்துக்கு கேடு விளைவிப்பதாக இருக்கின்றன என்றும் குறிப்பிட்டார்.



### பாகிஸ்தானுக்கெதிரான இரண்டாவது டெஸ்டில்

# முன்னிலையில் இலங்கை

இரண்டாவது டெஸ்டில் முன்னிலையில் இலங்கை காணப்படுகின்றது.

இரண்டு போட்டிகள் கொண்ட இத்தொடரில், காலியில் நேற்று ஆரம்பமான இப்போட்டியின் நாணய சுழற்சியில் வென்ற இலங்கையணியின் தலைவர் திமுத் கருணாரத்ன, தமதணி முதலில் துடுப்பெடுத்தாடும் என அறிவித்தார்.

இலங்கையணி சார்பாக டெஸ்ட் போட்டிகளில் டுனித் வெல்லலாகே அறிமுகத்தை மேற்கொண்டிருந்தார்.

இந்நிலையில், முதலில் துடுப்பெடுத்தாடக் களமிறங்கிய ஒஷாட பெர்ணாண்டோ, கருணாரட்ண ஆகியோர் சிறப்பான ஆரம்பத்தைப் பெற்ற நிலையில் 50 ஓட்டங்களுடன் மொஹமட் நவாஸிடம் பெர்ணாண்டோ வீழ்ந்திருந்தார். உடனேயே குசல் மென்டிஸும் ரண் அவுட்டாகியிருந்தார்.

இதைத் தொடர்ந்து யசீர் ஷாவிடம் 40 ஓட்டங்களுடன் கருணாரட்ணவும் விழ, அஞ்சலோ மத்தியூஸும், தினேஷ் சந்திமாலும் இனிங்ஸை நகர்த்தினர். பின்னர் 42 ஓட்டங்களுடன் நௌமன் அலியிடம் மத்தியூஸ் வீழ்ந்திருந்தார்.

அந்தவகையில், சந்திமால், தனஞ்சய டி சில்வா இனிங்ஸை நகர்த்திய நிலையில் இதைத் தொடர்ந்து நவாஸிடம் 80 ஓட்டங்களுடன் சந்திமால் வீழ்ந்திருந்தார். சிறிது நேரத்தில் தனஞ்சய டி சில்வாவும் 33 ஓட்டங்களுடன் நசீம் ஷாவிடம் வீழ்ந்திருந்தார்.

இந்நிலையில் நேற்றைய முதலாம் நாள் முடிவில் 6 விக்கெட்டுகளை இழந்து 315 ஓட்டங்களைப் பெற்றுள்ளது. தற்போது களத்தில், நிரோஷன் டிக்வெல்ல 42 ஓட்டங்களையும், டுனித் வெல்லலாகே ஆறு ஓட்டங்களுடன் ஆட்டமிழக்காமல் உள்ளனர்.



### சிநேகபூர்வப் போட்டியில்

## றியல் மட்ரிட்டை வென்ற பார்சிலோனா

ஐக்கிய அமெரிக்காவின் லொஸ் ஏஞ்சலஸில் இலங்கை நேரப்படி நேற்றுக் காலை நடைபெற்ற தமது வைரியான ஸ்பானிய லா லிகா கால்பந்தாட்டக் கழகமான றியல் மட்ரிட்டுடனான சிநேகபூர்வ போட்டியில் 1-0 என்ற கோல் கணக்கில் இன்னொரு லா லிகா கழகமான பார்சிலோனா வென்றது.

பார்சிலோனா சார்பாகப் பெறப்பட்ட கோலை றபின்ஹா பெற்றிருந்தார்.

**இங்கிலாந்து பிறீமியர் லீக் கழகமான செல்சியுடனான போட்டியில் 4–0 என்ற கோல் கணக்கில் இன்னொரு பிறீமியர் லீக் கழகமான ஆர்சனல் வென்றிருந்தது. ஆர்சனல் சார்பாக, கப்ரியல் ஜெஸூஸ், மார்டின் ஒடெகார்ட், புகாயோ ஸாகா, அல்பேர்ட் சம்பி லொகொங்கா ஆகியோர் தலா ஒவ்வொரு கோலைப் பெற்றனர்**

இதேவேளை, ஜேர்மனிய புண்டெலிஸ்கா கழகமான பயேர்ண் மியூனிச்சுடனான போட்டியில் 1-0 என்ற கோல் கணக்கில் மன்செஸ்டர் சிற்றி வென்றிருந்தது. சிற்றி சார்பாகப் பெறப்பட்ட கோலை எர்லிங் பிறோட் ஹலான்ட் பெற்றிருந்தார்.

இந்நிலையில், இங்கிலாந்து பிறீமியர் லீக் கழகமான செல்சியுடனான போட்டியில் 4-0 என்ற கோல் கணக்கில் இன்னொரு பிறீமியர் லீக் கழகமான ஆர்சனல் வென்றிருந்தது. ஆர்சனல் சார்பாக, கப்ரியல் ஜெஸூஸ், மார்டின் ஒடெகார்ட், புகாயோ ஸாகா, அல்பேர்ட் சம்பி லொகொங்கா ஆகியோர் தலா ஒவ்வொரு கோலைப் பெற்றனர்.







### புத்தளம் ரிக்லா விளையாட்டுக் கழகத்தின்

## புத்தளம் நகரின் பாரம்பரிய மாட்டு வண்டி ஓட்ட போட்டி

எம்.யூ.எம். சனூன்



புத்தளம் ரிக்லா◻விளையாட்டுக் கழகம் ஏற்பாடு செய்த புத்தளம் நகரின் பாரம்பரிய விளையாட்டுக்களில் ஒன்றான மாட்டு வண்டில் போட்டிகள், புத்தளம் இஜ்திமா மைதானத்தில் அண்மையில் இடம்பெற்றது.

அரை கரத்தை, ரேஸ் கரத்தை போட்டிகள் செவ்வனே நடந்தேறின. போட்டிக்கு பிரதம நடுவராக எம்.யூ.எம். வஸீம் கடமையாற்றினார்.

அரை கரத்தை போட்டியில் முதலாம், இரண்டாம், மூன்றாம் இடங்களை முறையே ஏ.எப்.எம். ரியாஸ், ஏ.டபிள்யூ.ஏ. வாரிஸ், எம்.யூ.எம். இஸ்மி ஆகியோர் பெற்றுக் கொண்டனர்.

ரேஸ் கரத்தை போட்டியில் முதலாம், இரண்டாம், மூன்றாமிடங்களை முறையே ஏ.டபிள்யூ. வாரிஸ், எம்.யூ.எம். இஸ்மி, எம். நாஸிக் ஆகியோர் பெற்றுக் கொண்டனர்.

## 'உலகக் கிண்ணத்தை டேவிட் வென்று கொடுப்பார்'



சர்வதேச கிரிக்கெட் சபையின் இருபதுக்கு -20 உலகக் கிண்ணத்தை அவுஸ்திரேலியாவுக்கு வென்று கொடுக்கும் வகையிலான வீரரே டிம் டேவிட் என அவுஸ்திரேலியாவின் முன்னாள் அணித்தலைவர் ரிக்கி பொன்டிங் நம்புகின்றார்.

தவிர, 2003ஆம் ஆண்டு உலகக் கிண்ண நட்சத்திரமான அன்றூ சைமொன்ட்ஸுடன் டேவிட்டின் போட்டியை வென்று கொடுக்கக்கூடிய திறமையை பொன்டிங் ஒப்பொட்டுள்ளார்.

ஸ்பெயின்

### சுட்டெரிக்கும் வெயில்;

# 1,000 பேர் உயிரிழப்பு

ஐரோப்பிய நாடுகள் அண்மைக்காலமாக வரலாறு காணாத அளவுக்கு கடும் வெப்ப அலையை எதிர் கொண்டு வருகின்றன.

குறிப்பாக ஸ்பெயினில் கடந்த சில நாட்களாகவே கடும் வெப்பநிலை நிலவி வருகின்றது. இங்கு நிலவும் வெப்பநிலையானது 40 பாகை செல்சியசை தாண்டியுள்ளதால் அந்நாட்டு மக்கள் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளனர்.

இந்நிலையில் ஸ்பெயினில் வீசிய வெப்ப அலையின் காரணமாக கடந்த 10 நாட்களில் 1,000-க்கும் மேற்பட்டவர்கள் உயிரிழந்துள்ளனர் என்று அந்நாட்டு சுகாதாரத்துறை அமைச்சகம் தெரிவித்துள்ளது.

இது குறித்து அந்நாட்டின் வானிலை ஆய்வு மையத்தின் செய்தித் தொடர்பாளரான ஹெர்வெல்லா கருத்துத் தெரிவிக்கையில் " நாட்டின் பல பகுதிகளில் இதுவரை இல்லாத அதிகபட்ச அளவாக வெப்பநிலை 40 பாகை செல்சியஸைத் தாண்டியுள்ளது.

குறிப்பாக கடந்த 10ஆம் திகதி முதல் 19ஆம் திகதி வரையிலான 10 நாட்களில் 1,047 பேர் உயிரிழந்துள்ளனர்.

மேலும் இங்கு உயிரிழந்தவர்களில் 672 பேர் 85 வயதுக்குட்பட்டவர்கள் என்றும், 241 பேர் 75 முதல் 84 வயதுக்குட்பட்டவர்கள், என்றும் 88 பேர் 65 முதல் 74 வயதுக்குட்பட்டவர்கள் எனவும் தெரியவந்துள்ளன.

சுவாசம், நோய்கள் உள்ளவர்களே அதிகளவில் உயிரிழந்துள்ளனர். இவ்வாண்டில் ஸ்பெயினில் ஏற்பட்ட 2-வது பெரிய வெப்ப அலையாக இது கருதப்படுகிறது.

மேலும் முதல் வெப்ப அலையை கடந்த மாதம் 11-ஆம் திகதி தொடங்கி ஒரு வாரமாக நீடித்துள்ளது. இந்த வெப்ப அலையினால் மொத்தம் 829 பேர் உயிரிழந்துளனர்" இவ்வாறு தெரிவித்துள்ளார்.

ஈரான்

### ஈரானில் கொட்டித் தீர்த்த கனமழை;

## 21 பேர் உயிரழப்பு ஈரானின் தெற்கு மாகாணம்



பார்ஸ் கொட்டித் தீர்த்த கனமழையால் ரவுட்பல் நதியில் ஏற்பட்ட வெள்ளப் பெருக்கில் சிக்கி 21 பேர் உயிரிழந்தனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் வெள்ளப்பெருக்கில் வாகனங்கள் பல அடித்துச் செல்லப்பட்டன எனவும் ஏறத்தாழ 10 கிராமங்கள் வெள்ள நீரில் மூழ்கியுள்ளன எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் பலர் காணாமற் போயுள்ளனர் எனவும் அவர்களை மீட்கும் பணியில் மீட்புப் படையினர் தீவிரமாக ஈடுபட்டு வருகின்றனர் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கத்தார்

### மர்ம நபர்களின் துப்பாக்கிச் சூட்டில்

## 29 நாய்கள் உயிரிழப்பு


கத்தாரின் தலைநகரமான டோஹோ என்னும் பகுதியில், இயங்கி வரும் விலங்குகள் மீட்பு மையமொன்றுக்குள் அண்மையில் அத்துமீறி நுழைந்த மர்ம நபர்கள் இருவர் அங்கிருந்த சுமார் 29 நாய்களை துப்பாக்கியால் சுட்டுவிட்டுத் தம்பிச் சென்ற சம்பவம் பெரும் அதிர்வலைகளை ஏற்படுத்தியுள்ளது.

விசாரணையில் " தங்களது மகன்களை குறித்த விலங்கு மீட்பு மையத்தில் இருந்த நாய்கள் கடித்ததால் ஆத்திரமடைந்த இருவரே இவ்வாறு துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டுள்ளனர் எனத் தெரியவந்துள்ளது.

இந்நிலையில் இச்சம்பவத்திற்கு மிருகங்கள் நல அமைப்புகள் மற்றும் ஆர்வலர்கள் கடும் கண்டனங்களை தெரிவித்து வருவதோடு . இது தொடர்பாக சம்பந்தப்பட்ட நபர்களை உடனடியாக கைது செய்ய வேண்டும் என்றும் போர்க்கொடி தூக்கி வருகின்றனர்.

பிரித்தானியா





## 2 1/2 வருடங்களாக அமர்ந்திருந்த சடலம்

பெண்ணொருவரின் சடலம், 2 1/2 வருடங்களுக்குப் பின்னர் அவரது வீட்டின் கதிரையில் இருந்து எடுக்கப்பட்ட சம்பவம் பிரித்தானியாவில் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

சுமார் 60 வயதான ஷெய்லா செலியோனே (Sheila Seleoane) என்ற பெண்ணின் சடலமே இவ்வாறு அண்மையில் பொலிஸாரால் கண்டெடுக்கப்பட்டுள்ளது.

இரண்டரை ஆண்டுகள் ஷெய்லா வாடகை செலுத்தாமல் இருந்துள்ள நிலையில் இது குறித்து சம்பந்தப்பட்டவர்கள் பொலிஸாருக்குத் தெரியப்படுத்திய நிலையிலேயே அவர் மரணித்துள்ளமை தெரிய வந்துள்ளது.

இந்நிலையில் ஷெய்லாவின் பிரேத பரிசோதனை அறிக்கையின் படி, அவரது உடல் சிதைந்த நிலையில் இருந்ததால், அவரது மரணத்துக்கான காரணத்தை கண்டறிய முடியவில்லை எனவும், அதே வேளையில், கொலை நடந்ததற்கான காரணங்கள் மற்றும் தடயங்கள் எதுவும் இல்லை என்றும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

ரஷ்யா

### காய்கறித்தோட்டமாக மாறிய

## ரஷ்யாவின் இராணுவ பீரங்கி

ரஷ்யாவுக்கும் உக்ரேனுக்கும் இடையே கடந்த பெப்ரவரி மாதம் 24 ஆம் திகதியிலிருந்து போர் இடம்பெற்று வருகின்றது.

இந்நிலையில் உக்ரேன் தலைநகர் கிவ்வுக்கு அருகே எரிந்து போன ரஷ்ய இராணுவ பிரங்கியைச் சுற்றிலும் ஒரு விவசாயி காய்கறிகளைப் பயிரிட்டுள்ளமை ஆச்சரியத்தை ஏற்படுத்தியுள்ளது.

இது குறித்து அவ்விவசாயி கருத்துத் தெரிவிக்கையில்" எனது இருப்பிடத்திற்கு திரும்பிய போது அங்கு எரிந்துப்போன ரஷ்ய இராணுவ பீரங்கியொன்று இருப்பதைப் பார்த்தேன். அதனை அகற்ற முயன்ற போதும் அது பலனளிக்காததால், அதனைச் சுற்றிலும் காய்கறிகளை பயிரிட ஆரம்பித்தேன். தற்போது எனது நிலம் போர் அடையாளங்களுடன் கூடிய காய்கறித் தோட்டமாக விளங்குகிறது" என்றார்.

அவுஸ்திரேலியா

## சிவப்பு நிறத்தில் மாறிய வானம்?

### அலறியடித்துக் கொண்டோடிய மக்கள்

அவுஸ்திரேலியாவின் வடக்கு விக்டோரியாவில் கடந்த புதன்கிழமை மாலை வானம் திடீரென இளம் சிவப்பு நிறத்தில் தோற்றமளித்துள்ளது.

இதனால் அதிர்ச்சியடைந்த மக்கள் வானத்தினைப் புகைப்படம் எடுத்து சமூக வலைதளங்களில் பதிவிட்டதால் சிறிது நேரத்தில் குறித்த புகைப்படங்கள் இணையத்தில் வைரலாகத் தொடங்கியுள்ளன.

அதே சமயம் இது வேற்றுக் கிரக வாசிகள் வருவதற்கான அறிகுறி என்றும், விண்கல் விழப்போகிறது என்ற கதைகளும் அப்பகுதில் பரவ ஆரம்பித்துள்ளன.

இதனால் அதிர்ச்சியடைந்த மக்கள் அலறியடித்துக்கொண்டு ஓடியதால் அப்பகுதியில் பெரும் பரபரப்பு ஏற்பட்டது.

விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் திங்கட்கிழமை 25 ஜூலை 2022, இல. 8, ஹுணுபிட்டிய குறுக்கு வீதி, கொழும்பு - 02 இல் வடிவமைக்கப்பட்டு இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.